Registered No. M. 2095.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUN 1927
MADRAS

ஓம்

# ஞானோதயம்.

—x—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 17 | 1927-ஞு ஜூன்-மீ 11உ | பகுதி 12 |

## பொருளடக்கம்.

1. பத்திராதிபர் குறிப்புகள் ... 325
2. ஞான பூமிகள்—தி. மாணிக்கம் பிள்ளை ... 328
3. குருவை குறிப்பிட்டறிதல் எப்படி? —V. V. சிவ. அவதானி 333
4. ஸத்தியவாக்கு —ஸீதாராம் ... 336
5. தாரகசங்கக்கூட்டம்—ஜி, வி, சுப்பராவ் ... 343
6. புனர்ஜன்ம விவேகம்—தி. மாணிக்கம் பிள்ளை ... 349
7. ஸமாசாரங்கள் ... 354

பத்திராதிபர் —V. இராமச்சந்திர நாயுடு, எனங்குடி.
தஞ்சாவூர் ஜில்லா

———

சந்தா விபரம்:—
வருஷ சந்தா. உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0
தனிப்பிரதி ரூ 0—2—0

———

ளம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# நேயர்களுக்கு விக்ஞாபனம்.

எல்லாம் வல்ல மஹான்களின் திருவருளால் நம் ஞானோதயப் பத்திரிகைக்கு 17 ம் ஆண்டு இத்துடன் முடிவடைந்து, அடுத்த ஜூலை௴ ல் 18 வது வருஷம் ஆரம்பமாகிறது. இக்கைங்கரியத்தில் முதலில் என்னைத்தூண்டி எனக்கு உத்ஸாகமளித்த என் அருமைச்சகோதரர்களுக்கும், பின்னர் இப்பத்திரிகையை அதிகமாய்ப் பரவச்செய்வதற்குப் பல சந்தாதாரர்களைச் சேர்த்து உதவிய என் அன்பார்ந்த நண்பர்களுக்கும், இதை விசேஷ ஆர்வத்துடன் வரவேற்று ஆதரித்த நம் சந்தா நேயர்களுக்கும், விஷய தானமளித்த பேருபகாரிகளாம் அன்பர்களுக்கும், பொதுவாய் இப்பத்திரிகையிலுள்ள குற்றங்குறைகளைப் பொறுத்து அவற்றைப் பொருட்படுத்தாது இதன் அபிவிர்த்தியில் மட்டும் நாட்டம் வைத்து அதற்கான யோஜனைகளை எனக்கு அடிக்கடி தந்துதவிய அபிமானிகளுக்கும் நான் என் மனமார்ந்த வந்தனங்களை அளிக்கின்றேன். இத்தகைய பேராதரவும் அநுதாபமும் நிறைந்த நண்பர்களின் சகாயமின்றி நான் மட்டும் தனியே இக்கைங்கரியத்தைச் செய்ய எங்ஙனம் சாத்தியமாகும்? சென்ற வருஷங்களில் அவர்கள் காட்டிய அன்பும் அநுதாபமும் நிறைந்த உதவிகளால் நான் இக்கைங்கரியத்தை இன்னும் அதிகமான உத்ஸாகத்துடன் புரிந்துவர சக்தியளிக்கப் பெற்றிருக்கின்றேன். அவர்களது நிரந்தரமான பேருபகாரங்கள் இப்பத்திரிகைக்கு எப்பொழுதும் ஊற்றுக்கண்போல் பெருகி வந்துகொண்டிருக்குமென்பது நான் சந்தேகமறத்தெளிந்த விஷயமாதலால் இது இன்னும் வெகுதூரம் பரவிப்பலரும் விரும்பி வாசித்துப் பயனடையுமாறு வரவர அதிகமதிகமான உத்ஸாகத்துடனும் சிறப்புடனும் நடத்தப்படுமென்பதை நான் கூறவும் வேண்டுமோ? ஸர்வலோக சரண்யராகிய ஸ்ரீபகவான் அவ்விதம் அநுக்ரஹிப்பாராக. சுபம்,

ஏனங்குடி,<br>
9—6—27.

V. இராமச்சந்திர நாயுடு,<br>
பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

ஓம்

# ஞானோதயம்.

## பிரம்மஞான மாதாந்தப் பத்திரிகை.

தொகுதி 17 | 1927-ஞு ஜூன்-மீ 11௳ | பகுதி 12

## பத்திராதிபர் குறிப்புகள்.

சென்ற மேமீ 8௳ முதல் 22௳ முடிய, மதனபள்ளியில் பிரம்மஞான ஸபையின அந்தரங்க ஸபையார் கூட்டுவாழ்க்கை விசேஷ ஆனந்தத்துடன் நடைபெற்றது. அதன் விபரம் அடியில் வருமாறு கூறுகின்றோம்:—

1927ஞு மேமீ 7௳ சனிக்கிழமை பகல் 3 - மணிக்கு காட்பாடி ஸ்டேஷனில் ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்கள், பிரம்மஸ்ரீ T. இராமச்சந்திர ராவ் அவர்கள் முதலிய 14 பெயர்கள் சந்தித்து, பிரம்மஞானஸபை அங்கத்தினரான ஹிந்து உணவுச்சாலை மானேஜரால் அன்புடன் சுகமான சிற்றுண்டியும் பாலும் காபியும் அளிக்கப்பட்டு, ஒரு மோட்டார் வண்டியில் 4 - 15. மணிக்குப் புறப்பட்டோம். நாங்கள் புறப்பட்ட நிமிஷமே ஒரு வருஷத்திற்கு மேலாக இந்தப் பக்கங்களில் திரும்பிப் பார்க்காத வருணபகவான் திடீரென்று தோன்றி நன்மாரி பெய்து எங்கும் குளிரச் செய்தனன். காட்பாடி யிலிருந்து மதனபள்ளிக்குள்ள 80 மயிலும் $4\frac{1}{4}$ மணி நேரத்தில் கடந்து $8\frac{1}{2}$ மணிக்குப்போய்ச் சேர்ந்தோம். அங்கு சிலர் எங்களுக்கு முன்னதாகவே வந்திருந்து, எங்களுக்கு உணவு பால் முதலியன தயாரித்துவைத்து, எங்கள் வரவை எதிர்பார்த்திருந்தனர். மிகவும் களிப்புடன் உண்டு படுத்து உறங்கிய பின், மறுநாட் காலையில் எல்லோரும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து பிறகு பாரதஸமாஜ பூஜை பிரம்மஸ்ரீ நரஹரி சாஸ்திரிகளுடன் எல்லோரும் சேர்ந்து செய்

தோம். பிறகு 8 மணிக்கு அந்தரங்க சபைக் கூட்டம் நடந்தது. அன்று மாலை $5\frac{1}{2}$ மணிக்குமேல் ஸ்வேதபத்மாஷ்டமிதினம் கொண்டாடப்பட்டது. பிரம்மஸ்ரீ திரிலோகிகர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார். ஸ்ரீமான்கள் ஸர். டி. ஸதாசிவய்யர் டி. இராமச்சந்திரராவ் முதலிய ஏழுபெயர்கள் பிளாவட்ஸ்கி அம்மையாரைக் குறித்தும் மேமீ 8உ யின் மகத்துவத்தைப் பற்றியும் பேசினார்கள். அப்பொழுது இரண்டங்குலத்திற் கதிகமாக நன்றாய் மழை பொழிந்தது. மறுநாள் முதல் தினம் காலையில் $6\frac{1}{2}$ மணிக்கு பாரதஸமாஜ பூஜையும், $8\frac{1}{2}$ மணிக்கும் மாலை $4\frac{3}{4}$ மணிக்கும் அந்தரங்க ஸபை படிப்பும், பகல் $2\frac{1}{2}$ மணிக்கு பாரத ஸமாஜ பூஜை அப்யாசமும் நடைபெற்றன. 11உ ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியின் ஜன்மதினக் கொண்டாட்ட மீட்டிங்கு, ஸ்ரீமான் திரிலோகிகர் பங்களாவாகிய கிருஷ்ண காட்டேஜில் கூடிற்று. ஸ்ரீமான் கிருஷ்ணதாஸரான ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்கள் முன்பு ஒரு சமயம் கிருஷ்ணஜி உட்கார்ந்து ஆட்டம் பாட்டம் முதலிய பார்த்தும் கேட்டும் ஆனந்தித்தும் கோகுலம்போல் செய்வித்த இடத்திலேயே உட்காரச் செய்ப்பட்டவராய் அக்கிராசனம் வகித்தனர். அங்கிருந்தவர்கள் எல்லோரும் தாரகப்பாட்டுகள் பாடியதும், ஐயர் அவர்கள் சில மொழிகள் கூறினபின் அனைவரும் ஒரு நிமிஷம் கிருஷ்ணஜியை நினைத்து தியானம் செய்ய மங்களத்துடன் இனிது முடிந்தது.

15உ ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அந்தரங்க ஸபை கூடிற்று. பிறகு $9\frac{1}{2}$ மணிக்கு மதன பள்ளி அக்கிரகாரத்திலுள்ள ஸ்ரீ வெங்கட்டரமணஸ்வாமி கோவிலில் பிர்ம்மஸ்ரீ நரஹரிசாஸ்திரிகளால் பாரத ஸமாஜ பூஜை வெகு விமரிசையாய் செய்யப்பட்டு, எங்கும் ஐயன் அருளும், சக்தியும் பரவிற்று. அன்று மாலை 6 மணிக்கு பிரம்மஸ்ரீ ஸதாசிவய்யரவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் இராஜமகேந்திர புரம் பப்ளிக் பிராஸிக்கூடர் ஸ்ரீமான் இராமராவ் அவர்கள் யோகம், சாஸ்திரமும் பயிற்சியும், என்னும் விஷயத்தைக் குறித்து உபன்யசித்தார். ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்கள் பக்தி விஷயத்தைப்பற்றியும், ஞானயோகத்தினும் கர்மயோகம் விசேஷமென்றும், அதற்கு பக்தி சேராமல் பலன் கிடைக்காதென்றும், பகவானிடம் பக்தி மிகுந்து அவன் காரியமே கண்ணாயிருக்கவேண்டுமென்றும் கூறினார். 16உ இராத்திரி வைசாக



பௌர்ணமி சேர்ந்தது ஒரு விசேஷமான விஷயம். 19உ காலையில் சகோதரர் F. S. இராகவாச்சாரியார் அவர்களுடைய இரண்டு குமாரர்களுக்கும் ஒரு குமாரத்திக்கும் பாரத ஸமாஜ ரீதியாக உபநயனம் செய்விக்கப்பட்டது. 20உ ஸ்ரீமான் கிருஷ்ணஜியால் உலக ஸர்வ கலாசாலை ஏற்படுத்தப்போகிற தேட்டு வென்னும் மலைப் பிரதேசத்திற்கு எல்லோரும் சேர்ந்துபோனோம். நமது கிருஷ்ணஜியின் பிறப்பிடமாதலால் மதனபள்ளி மிகவும் புண்ணிய பூமி. அவர் பிறந்த வீடும், அவரும் அவர் பிரிய சகோதரர் நித்தியானந்தரும் பள்ளிகொண்டாமலைச்சாரலில் சருக்கிய மிருதுவான இடம் முதலிய அவர்கள் விளையாடிய ஸ்தலங்களும், படித்த இடமும் இன்னும் அவர்கள் ஞாபகத்தை மூட்டும் பல இடங்களும் மேன்மைபெற்றுள்ளன. ஆகையால் ஸகஜமாகவே டாக்டர் பெஸண்டம்மையாரவர்களுக்கு மதனபள்ளியின்கண் ஒரு விதமான பிரேமை உண்டாயிற்று. ஆனதுபற்றி ஒரு சமயம் இங்கிலாந்திலிருந்து ஹாலண்டுக்கு ஆகாய விமானத்தில் போகும் பொழுது இருவரும் கல்வி விஷயத்தில் ஸ்ரீமான் கிருஷ்ணஜி செய்யவேண்டிய வேலைகளுக்குத்தகுந்த இடம் எதுவென்று பேசிவர, அம்மையாரவர்கள் "மதனபள்ளி" என்றனர். அது முதல் அந்த ஊரின் கண் நோக்கம் வைத்தனர். நமது கிருஷ்ணஜி இரண்டு மூன்று தரம் அங்கு வந்தனர். நித்தியானந்தர் தேட்டு பள்ளத்தாக்குத்தான் அதற்கு உரிய இடம் என்றமையால் தேடித் தேடி கடைசியில் தேட்டு பள்ளத்தாக்கை ஸ்ரீமான் கிருஷ்ணஜி நிச்சயம் செய்தனர். அதன் பிறகு அதை வாங்க ஏற்பாடுகள் நடந்தன. ஸ்ரீமான் திருலோகிகரும் அவர் சிஷ்யரான ஸ்ரீமான் நரசிம்மரெட்டிகாரும் வெகு பிரயாசையெடுத்து சுமார் 500 ஏகர் உள்ள அந்தத்தாக்கில் 180 ஏகர் வாங்கினார்கள். பாக்கியும் கூடிய சீக்கிரம் வாங்க ஏற்பாடுகள் நடக்கின்றன. அவ்வித மனோரம்யமான இடத்திற்கு எல்லோரும் யாத்திரைபோனோம். ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் 12 ஜட்கா வண்டிகளில் ஏறிக்கொண்டு போனோம். தலைவர்கள் மூவரும் ஒரு மோட்டாரில் சென்றனர். அங்கு சேர்ந்த பின்னர் சிற்றுண்டி அருந்தினோம். அதன் பின் எல்லோரும் கைகளைக் கோர்த்துக்கொண்டு ஆலமரத்தைச் சுற்றி நின்று சகோதரத்வத் தியானம் செய்தோம். பிறகு சில சகோதரிகள் தாரகப்பாக்கள் பாடினர். பின்பு எல்லோரும் தியானம் செய்தனர். சிலர் வண்டிகளில் ஏறிக்கொள்ள பலர் வாங்கியுள்ள ஸ்த

லம் முழுவதையும் சுற்றிப் பார்த்தனர். மிகவும் மனோஹரமாயிருந்ததுடன் கிருஷ்ணஜியின் திருவடிகள் பட்டதால் புனிதமான சிற்சில இடங்களில் நின்றதும் ஒரு பெரிய ஆனந்தமுண்டாயிற்று. எல்லோரும் இரவு போஜன சமயத்திற்குள் மதனபள்ளி வந்து சேர்ந்தோம். 22வ கூட்டுவாழ்க்கையின் கடைசி நாள் காலை 8 மணிக்கு அந்தரங்க சபைக் கூட்டம் கூடிற்று. பிறகு 9½ மணிக்கு ஹனுமார் கோவிலில் பாரத ஸமாஜ பூஜை நடந்தது. இக் கூட்டத்தில் சென்னை அடையார் பிமிலிபட்டணம், ராஜமஹேந்திரபுரம், பல்லாரி, மைசூர், திருச்சி, தஞ்சை ஜில்லாக்கள் முதலிய பல விடங்களினின்றும் 25 புருஷர்களும், 13 ஸ்திரீகளும், வந்தவர்களின் குழந்தைகள் 7-ம், வேலைக்காரர்கள் 2 பேரும் ஆக 47 பேர்கள் ஒருமித்து ஒரு குடும்பமாக இருந்து வித்தியாசமின்றி வாழ்ந்த வாழ்க்கையின் ஆனந்தத்தை சொல்லிமுடியாது. மேலும் ஆன்ம ஏற்றம் பெற்ற மூவர்கள் அதில் இருந்தமையால் எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களும் ரிஷிகளின் ஸேவையே மேல் நோக்கமாக இருத்தலும் வியாபித்திருந்தன. ஆயினும் படிப்பும் உபன்யாசங்களும் நிகழ்ந்ததோடு மாத்திரம் நிற்கவில்லை. தினம் இரவு படுக்கைக்குப் போவதற்கு முன்னர் ஒரு மணி காலம் சிறுவர்களும், சிறுமிகளும், பெரியவர்களும் கலந்து ஆடல்களும் பாடல்களும் புரிய, தேவகணங்களும் கலந்தனவோ வெனச்சொல்லும்படியிருந்தது. பதினைந்து நாட்களும் பதினைந்து உத்ஸவ தினங்களாய் எல்லோரும் ரிஷிகளுடன் கலந்து வாழ்ந்தோம். இனி சாகத்தீவில் ஏற்படப்போகிற கூட்டு வாழ்க்கைக்கு இது ஒரு முன் குறியாகத் தோன்றுகிறது. அந்த ஆனந்தத்தை அங்கு வந்திராத எல்லோரும் அடைவார்களாக. அவ்வித கூட்டங்கள் அடிக்கடி பல இடங்களிலும் கூடுமாக. மகரிஷிசங்கத்தின் அருளை எல்லோரும் அடைவார்களாக.

---

# ஞான பூமிகள். Initiation.

அஞ்ஞான பூமிகளை ஏழாகவும், ஞான பூமிகளை ஏழாகவும் மேலோர் வகுத்திருக்கின்றனர்.

"வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞான பூமிகளேழென்பார்" இவ்விடத்தில் பூமி என்று உபயோகித்திருக்கும் வார்த்



தைக்கு அர்த்தம் லோகமல்ல, இடமல்ல; ஆனால், பிரக்ஞை மலர்ந்து வரும் படிகளைக் காட்டுகின்றது. பிரக்ஞை என்பது "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசிக்கும்" அறிவின் பீஜம்—வித்து. இதை அவித்தை (மறதி) எனும் கவசத்தால் மூடி, விக்ஷேபத்தால் தோற்றமாகும்படி ஜீவனைப் பிரித்து இதன் போகத்திற்காக ஜகத்தை ஜனிப்பித்து, ஆவரண சக்தியால் அதை மதிமயங்கி விஷயமண்ணைத் தின்னும்படி அனுப்பிவைத்திருக்கின்றது. இந்த பிரக்ஞைக்கு (ஆறறிவு) தூலதனு (சரீரம்) கிடைத்த பிறகு கண்ணைத்திறப்பதும், விஷயமண்ணை உண்பதும், உறங்குவதுமாய் பல ஜன்மங்கள் எடுத்து அபர ஞானத்தை—(வால ஞானத்தை கீழ்ஞானத்தை)—சிறுகச் சிறுகச் சேர்த்துக்கொண்டுவந்து, பிறகு பரஞானத்தின் கண் திறக்கப்பெற்று, படிப்படியாய் ஆணவ மலத்தையும், காமிய மலத்தையும், மாயை மலத்தையும் கழித்து வருகின்றது. இப்படி வரும் வழியில் கீழ் இறங்கி விஷய மண்ணைத் தின்று அபர ஞானத்தைப் பெற்று வரும்போது இருக்கும் பிரக்ஞையின் நிலைகள் — படிகள் — அஞ்ஞான பூமிகளென்று கூறப்பெற்றிருக்கின்றன. அவையாவன: "நான்" எனும் வித்து ஜாக்கிரம், 'நான்தான்' எனும் ஜாக்கிரம், 'மமதை (எனது) எனும் மஹா ஜாக்கிரம், 'மனோராஜ்ஜியம்' எனும் ஜாக்கிர சொர்ப்பனம், 'உறக்கமனோ ராஜ்ஜியம்' எனும் சொர்ப்பனம், ஞாபகப்படுத்தும் நினைவு எனும் சொர்ப்பன ஜாக்கிரம், இருள்போல் மூடி கனவு நினைவுமில்லாது இருப்பது சுழுத்தி ஆக ஏழுபடிகள். இப்பெயர்களை கவனித்தாலே இடமல்ல, மனோ நிலை என்றும், லோகமல்ல ஒவ்வொரு நாளும் மானிடர்கள் எல்லோருக்கும் இருக்கும் "அவஸ்தை" என்றும் நன்குய் விளங்குகிறது.

அஞ்ஞான பூமிகளை எவ்விதம் கொண்டிருக்கின்றதோ அவ்விதமே ஞானக்கண் திறக்கவும் தூக்கத்தை விட்டு சுபமடைய இச்சை ஏற்படவும், இந்திரியத்தாலும், மனதாலும் கொடுக்கப்பட்ட வர்த்தமான மண்ணைத் தின்னாமல் "கருத்தெழும் விருத்தி"யாலும் புத்தியாலும் வருவதை விசாரித்துத் தெரிந்துகொண்டு, முன்பு அஞ்ஞான பூமிகளில் நடக்கும்போது கையாடி இருந்த கருத்துக்களை யெல்லாம் விட்டு, "எப்பொருள் எத்தன்மைத்தாயினும்" அப்பொருளின் மெய்ப்பொருளைக்கண்டு வஸ்து நிச்சயம் கொண்டு, மித்தையை (பொய்யை) விட்டு, கண்ணும் காக்ஷியும்

காண்பானும் ஏகமாய் இந்திரியாதிகள் 'தான்' என்கிற தலை எடுக்காத விதஞ்செய்து மௌனமாகி, ஒன்றாய் பலவாய் உயிர்க்கு உயிராய் ஆடும் பரஞ்சோதி என தானுங்கரணங்களை ஆடவைத்து "கர்த்தராம் அகந்தை விட்டு அகர்த்தராகி கரண விருத்திகள் அவத்தை காண்பாரா"கிய நிலைக்கு வரும் வரையில் இருக்கும் படிகளை ஞான பூமிகளென்று வகுக்கப்பட்டிருக்கின்றன.

"துர்ச்சங்க நிவிர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சையாகு
நற்சங்க மொழிவினவி ஞான நூல் பழகல் விசாரணையா நம்பி
முற்சங்க வேஷணைகள் விடறனுமானசி யிந்த மூன்றினுஞ்
சற்சங்க மனதிலுண்மை யறிவுத்தல் சத்துவாபத்தித்தானே.
தத்துவத்தின் மனமுறைத்து மித்தையெலாமறத்தலசம்சத்தியாகு
மத்துவிதானந்தம் வருந்திரிபுடிபோம் பதார்த்தபாவனை யதாகும்
வஸ்து நிலையிருந்தபடியிருந்த மவுன சுபாவந்துரியமாகு."

இப் பூமிகளைக் குறிக்கும் வார்த்தைகளை சாதாரணமான வார்த்தைகளாக கவனித்திருப்பதினால் எவருக்கும் இவ்வார்த்தைகளில் ஆழ்ந்து அடங்கி இருக்கும் முக்கியமான கருத்துகள் அகப்படவில்லை என்று தெரிகின்றது. உதாரணமாக, முதல் பூமியைக் குறிக்கும் இலக்ஷணத்தை "சுபேச்சை'' என்று சொல்லியிருக்கிறது. ''துர்ச்சங்க நிவர்த்தி வந்து சிவஞானத்தை'' இச்சிப்பது என்று இதன் அருத்தம். இவ்வித இச்சை எவருக்குத்தான் இல்லை? இது சாதாரணமாய் கடவுளிடத்து பயபக்திகொண்டு நல்லவனாகவிருக்கும் ஒவ்வொருவனிடத்திலும் கிஞ்சித்து ஏறக்குறைய இருப்பதால், இதை சாதாரணமாய் எல்லோருக்கும் உண்டான இச்சை என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேற் சொல்லிய பாட்டின் இரண்டாது அடியிலிருக்கும் 'நற்சங்க மொழிவினவி' என்கிறதை கவனித்தால் அதில் நற்சங்கத்தில் சேரவேண்டும், சேர்ந்திருக்கவேண்டும், நற்சங்கத்தார் சொல்வதைக் கேட்கவேண்டும் என்று ஏற்பட்டிருப்பதை கவனித்தால் கருத்து விளங்கும்

நற்சங்கத்தில் சேருவது என்பதால் அநேகருக்கு நற்சங்கமென்பதின் அருத்தம் இன்னும் துலக்கமாய் விளங்கவில்லை. இதை சாதாரணமாக சன்னியாசிகள் கூட்டத்தையும் மடாதிபதிகளையும் இன்னும் வைதிக முறையிலிருக்கப்பட்டவர்களையும் குறிப்பிட்டு அவரவர் அபிமானத்தின் தரப்படி சங்கமென்று மதி



த்து சேர்ந்து தொண்டுசெய்து வருகின்றனர். சங்கம் என்றால் கூட்டம்; ஆனால் இப்போது நாம் கவனிக்கவேண்டியது நற்சங்கத்தின் இலக்ஷணக் குறிகள், அதாவது யாதொரு குற்றங் குறையில்லாமல் மெய்ஞான வழியிலிருப்பவர்களைத்தான் சற்சங்கத்தார் என்று சொல்லத்தகும்.

நம் இந்தியாவில் பிச்சைக்கார பண்டாரங்கள், வேஷதாரிகள் இவர்களைத்தள்ளி சுமார் ஒன்பது இலக்ஷம் சன்னியாசிகள் நிர்வாண கோலத்துடனும் கௌபீனஸ்தர்களாகவும் இன்னும் வெவ்வேறு சின்னங்களுடனும் கூட்டமாயும் ஏகாங்கியாயும், நிஷ்டைகொண்டும் சஞ்சரித்துக்கொண்டும் இருக்கின்றனர். இவர்களெல்லாம் வெகு சாதுவாயும், காம, குரோத, மோக, லோப, மத, மாச்சரியம் என்பவைகளில்லாமலும் தத்தம் கொள்கையின்படி இருந்து வருகின்றனர். இவர்களின் கூட்டத்தை சாதுசங்கம், அல்லது சன்னியாசி சங்கம் என்று சொல்லத்தகுமே தவிர நற்சங்கத்தார் என சொல்லத்தக்கதல்ல. இவர்கள் அநேகமாய் ஏதோ ஒரு விகற்ப கருத்தில் பிடிபட்டு "திருஷ்டிமாறி பட்டுப்பூச்சி கட்டும் கூண்டைப்போல் கருத்துகளால் கூடுகட்டி அதன் நடுவில் இருந்துகொண்டு சுய நோக்கங்கொண்டு ஆனந்தித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அதிகாரிபடிக்கு அருகில் வந்திருந்தும் மேலுக்குப்போகாமல் சுயகருத்தின் கவசத்தால் மூடப்பட்டிருக்கின்றனர். சுயகாமியம்போய் நிஷ்காமியம் வரும்வரையில் சற்சங்கத்தை எட்டமுடியாது. இந்நிலையைக்கண்டுதான் "முதற் பூமி கிடைப்பதுவே வருத்தம் மைந்தா காலான முதற் பூமி கைவந்தால் முத்தியும் கைவந்ததாமே'' என்று கைவல்ய நூலில் சொல்லி இருக்கிறது. ஆதலால் முதற் பூமியில் சேருவது மெத்த கஷ்டம். முத்தர்கள் ஒரு சிஷ்யனை— அதாவது அதிகாரி நிலைக்கு வந்து பரிபக்குவமடைந்தவனை,—இனிஷியேஷன் என்கிற முதல் தீக்ஷை கொடுக்கும்போது சொல்லப்பட்ட வார்த்தை இது.

தீக்ஷை பெறும் காலத்தில் சிஷ்யனிடத்து இருக்கும் அருமையான சிறிய ஜோதி, தீக்ஷை கொடுப்பவர்களுடைய ஜோதியுடனும் அங்கிருந்து அவர் தலைக்குமேல் நக்ஷத்திரம்போல் பிரகாசிக்கும் ஜோதியுடனும் சேர்ந்து ஐக்கியப்பட்டு ஒன்றாகிறது. சிஷ்யனது ஞானக்கண் திறக்கப்படுகிறது. இனிஷியேஷன்—தீக்ஷை

என்று சொல்வது ஏதோ இரகசியமாய் சொல்லிக்கொடுக்கும் முத்திரை முதலிய உபதேசங்கள் அல்ல. சிஷ்யனிடத்தில் இருக்கும் சிறு விளக்கின் ஜோதி பெரிதாகி நற்சங்கத்தார் ஜோதியுடன் சேர்வது. இது எப்படி என்றால், தட்டான் ஒருவன் பொன்னை மூசையில்வைத்து கரியால் மூடி ஊதிக்கொண்டு வரும் சமயத்தில் பக்குவம் தெரிந்து எவ்விதம் வெண்காரத்தைப் போடுகிறானோ அவ்விதம் இனிஷியேஷன் என்பது சிஷ்யனுடைய பிரக்ஞையின் நிலையை அக்ஞானபூமிகளிலிருந்து ஞானபூமிக்கு ஏற்றிவைப்பது. அப்படி ஏற்றிவைப்பதால் தான் அப் பூமியில் வருபவர்களைப் பற்றி அடியில் வரும் பாட்டால் தெரிந்துகொள்ளுங்கள்.

"இப்புவியி லிஞ்ஞான பூமியொன்றிலிரண்டிலடைந் திருந்தாராகு
லப்புருடர் மிலேச்சராகிலுமுத்தர் குருபாதத்தாணை மெய்யே
தப்புரை யென்றவர்கெடுவார் நடுவானமறைகளை நீ சங்கியாதே."

சற்சங்கத்துக் குகந்தவர் எனும் பட்டம் தரிக்க குறைந்த பக்ஷம் முதல் பூமியை அடைந்திருக்கவேண்டும். முதல் பூமியிலிருந்து, ஏழு பூமிகளில் நடப்பவர்களை சத்சங்கத்தார் என்று கூறப்பட்டிருக்கிறது.

புத்த மதத்தில் சங்கத்தை மூன்றாக வகுத்திருக்கின்றனர் முதலாவது:—குருவை கைபிடித்து சீலங்களை அப்பியசித்த அதிகாரிபடிக்கு வருபவர்களை 'தமுடைய' சங்கம் என்றும், இரண்டாவது:—ஞான பூமியைப்பெற்று நாலாம் பூமி வருகிறவரையில் இருக்கப்பட்ட அஞ்ஞானம், விபரீதம், சந்தேகம், இன்னும் உள்ள ஏழு தடைகளை அறுத்துக்கொண் டிருப்பவர்களை "ஆரிய சங்க" மென்றும் (ஆரியமார்க்கம் என்றால் முத்தி மார்க்கம் ஞான பூமிகளில் நடப்பது) மூன்றாவது.—ஜீவன்முத்தர்கள் கூடியிருக்கும் சங்கத்தை "பரமார்த்த சங்கம்" என்றும் பிரித்திருக்கின்றனர். அவர்களுடைய மூன்றாவது பிரார்த்தனை எப்போதும் இச்சங்கத்தைக் குறித்திருக்கிறது.

முதலாவது இனிஷியேஷன் பெற்றதுமுதல், அடுக்கடுக்காய் மேல்பட்டு உள்ளவர்களை சகோதர சங்கம் (Occult Brotherhood) என்று திவ்யஞான சபையார் கூறுகின்றனர்.

இச்சங்கத்தில் சேர்ந்து சிவஞானம் இச்சிப்பதை சுபேச்சை என்று சொல்லத்தகும். ஆதலால் ஞானபூமி என்பது இனிஷியேஷன் பெற்ற நிலை.

தி. மாணிக்கம் பிள்ளை,
அடையாறு.

---

# * குருவைக் குறிப்பிட்டறிதல் எப்படி.

கிறிஸ்தவர்களுக்கு உபாஸ்யரான ஜீஸஸ் கிறிஸ்துவின் சரித்திரம் அவர்களது வேதமான பைபிளில் இருக்கிறது. கிறிஸ்து யூதர்களுடைய ஆசிரியரிடம் வளர்ந்தபோதிலும், அவரது மஹிமையை அந்த யூதர்களில் மிகச்சிலரே கண்டு பிடித்தார்களென்று அந்த சரித்திரத்தைப் படித்தவர்கள் ஆச்சரியமடைந்திருக்க வேண்டும். அவர் உலகினருக்கு உபதேசஞ் செய்த காலமெல்லாம் அவர் மஹிமை அவரது அந்தரங்க சிஷ்யர்களுக்குங்கூடத் தெரியாமலிருந்ததாகக் காணப்படுகிறது. அவரது உபதேசத்திற்கு முன் அவர் சிஷ்யர்களில் ஒருவரான பீடர், தனக்கு ஸகஜமான தொந்தரவோடு, தன் குருவானவரை தெய்வ குமாரனென விளம்பரப்படுத்த ஆரம்பித்தார். அதற்கப்பால் மற்றொரு சிஷ்யன் துரோகியாகி கிறிஸ்துவை சத்துருக்களுக்குப் பிடித்துக் கொடுத்து, இதர்களும் அவரைவிட்டு ஓடிப்போன பின்னர், அப் பீடர் என்ற சிஷ்யர்கூட அவ்விதமே அவரை நிராகரித்தார். மேலும் அந்தக் கிறிஸ்துவுக்கு அபரிமிதமான ஆபத்துகள் நேர்ந்தபொழுது எல்லா சிஷ்யர்களும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். வெகு ஜனங்களுக்கு அவரனேக வியாதிகளை நீக்கி தமது மஹிமைகளைக் காட்டினாலும் அவரை நம்பும்படிக்காவது, அவர் மஹானென்னத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றாவது அவர் சிஷ்யர்கள் எவரும் அந்த ஜனங்களுக்குப் போதிக்காமல் போனார்கள். மேலும் அவர் ஜெருஸலேம் என்னும் நகரத்திற்குக் குதிரையின் மீது ஏறி ஓடிச் சென்றுகொண்டிருந்தபொழுது, ஸாமான்ய ஜனங்களோடுகூட அவரது சிஷ்யர்களும் அவரைக் கொல்லும்படியாக உரத்திக் கத்தினார்கள். இக்கதை அவர் சிஷ்யர்கள் எழுதிய கிரந்தங்களினின்று எடுத்து எழுதினேன். இக்கதையின் விசேஷங்களைப் பார்க்க, அவரைச் சுற்றிலுமுள்ள ஸாமான்ய ஜனங்களுக்கு அவரது நிஜ குணங்களைத் தெரிவிக்கும் குறி எதுவும் தெரியாதிருந்தல் ஸகஜமென நாம் அறிகிறோம். அவர்கள் அதற்கு முன்னர் அந்தக் கிறிஸ்துவை பால்யனாகவும், சிறு பிள்ளையாகவும், பெரிய பிள்ளையாகவும், வயதானவராகவும் இம்மாதிரி அந்த நாஜரத் தென்னும் கிராமத்தில் வசிக்கும் ஜீஸஸ் என்பவனாகவும், ஜோஸேப்

* டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்களின் ஆங்கில வியாசத்தின் மொழிபெயர்ப்பு தெலுங்கு திவ்யஞான தீபிகையில் வெளிவந்துள்ளதை அனுசரித்து பத்திராதிபரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

என்பவரின் குமாரனாகவும் அறிந்திருந்தார்களேயொழிய, அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மஹானான அவதார புருஷனாகவாவது, உலகை ஜயிக்கும் ராஜ சிரேஷ்டனாகவாவது, யூதர்கள் ரோமன் ராஜ்யத்தின் அடிமைத் தனத்தினின்று உத்தாரணம் செய்யும் மஹானுபாவனாகவாவது அறிந்துகொள்ளவில்லையல்லவா? அவர் விசேஷமாய் ஞானோபதேசம் செய்யவில்லை. அவர் கூடார்த்த சூசகங்களாயுள்ள கதா ரூபத்தில் போதிக்கினும் அதனுடைய அந்தரங்கக் கருத்தை உலகினர் கண்டுபிடிக்காமற் போனார்கள். அதனுடைய ரகசியத்தை தன் வீட்டிலுள்ள அவரது சிஷ்யர்களுக்குமாத்திரமே உபதேசித்தார். அவ்விதமே அவர் சிஷ்யர்கள் எழுதின முதல் மூன்று திவ்ய வார்த்தைகளில் இருக்கிறது. நான்காம் திவ்யவார்த்தையில் அவர் பெரிய மஹானென்றும், அழகான அரிய உபன்யாசங்கள் அளித்தாரெனவும் இருக்கிறது. இவற்றைக்கூடக் கலந்துகொண்டாலும் கிறிஸ்துவின் உபதேச மொழிகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

இந்தக் காலத்தில் அவரைச் சுற்றிக் கூடியிருந்த மனிதர்களின் அக்ஞானம் இதனால் வெள்ளிடையாயிற்று. அக்காலத்திய யூதர்களின் துரவஸ்தையைப் போலொத்தது நமக்கு இப்பொழுது நேர்ந்தமையால், நாம் அவ்வித அக்ஞானத்தினின்று எவ்விதம் தப்புவித்துக்கொள்ளவேண்டும்? கிறிஸ்துவினிடம் எந்தெந்த நல்ல குணங்கள் பரிபூர்ணமாய் அமானுஷப் பிரக்ஞையில் பிரகாசித்ததோ அந்தந்த குணங்களை பீஜங்களாகவாவது நம்மில் விர்த்தி செய்துகொண்டாலொழிய, அப்படிப்பட்ட நமது இருளைப் போக்கடித்துக்கொள்ள மாட்டோம். சூரிய காந்தியில் அவரது கிரணங்களால், நமது கண்களிலுள்ள ஆகாச தத்வம் சலனத்தை அடைந்து, நமக்கு பிரபஞ்சம் எவ்விதம் புலப்படுமோ, அவ்விதமே நமது ஞானக் கண்களுக்குக்கூட கிறிஸ்துவின் ஹிருதயத்தில் பிரகாசித்த சூர்ய கிரணங்களின் பிரகாசம் வியாபித்து நமக்கு ஞானத்தை உண்டாக்கும்.

இக்குணங்களில் முதலாவது, பலவீனர்களுக்கும், சரீர ஜாட்டியம் உள்ளவர்களுக்கும், குழந்தைகளுக்கும், ஸஹாய ஸம்பத்தியில்லாதவருக்கும், பாபிகளுக்கும், மானிட ஜாதியை விட கீழ் ஸ்திதியிலுள்ள பசு பக்ஷி, கிருமி கீடக, மத்ஸ்ய, விருக்ஷ, செடி, கொடி, லோஹம், கல் முதலான ஸகல பூதங்களுக்கும்



தயையைக் காண்பித்தலாம். குரூரமாய் நடத்தப்படாது, அதிக தொந்தரவு செய்யக்கூடாது. வன்சொல் சொல்லப்படாது; கொடுமை கூடாது; கோபிக்கக்கூடாது; அசூயைப்படக்கூடாது; எவரையும் நிந்திக்கப்படாது. நிதானம், மனதில் வியாகூலம் இல்லாதிருத்தல், இதரர்களுக்கு நன்மையுண்டாக வேண்டுமென்னும் புத்தியைப் பிரகடனம் செய்தல், அழுக்காவது சலனமாவது ஏற்பட அவகாசமில்லாதபடி ஸ்திரமான திருப்தி அல்லது சந்தோஷத்துடனிருத்தல் முதலியவை நம்மிடம் குடிகொள்ளவேண்டும். விசாலமான மனதை யுடையவர்களாயிருக்கவேண்டும். அதாவது பக்ஷபாதமில்லாதிருத்தலும், இதரர்களிடம் கெட்ட சிந்தனை இல்லாதிருத்தலும், அர்த்தமில்லாத உலக நிபந்தனைகளையும் ஆசாரங்களையும் அனுசரியாதிருத்தலும், பூர்வாசார அபிமானமில்லாதிருத்தலும், எம்முகமிருந்து வரினும் ஸத்தியத்தை கிரஹித்தலும், குணங்களை ஒட்டி ஸகல வஸ்துக்களின் யோக்கியதைகளையும் தீர்மானித்தலுமாம். காமக்குரோதாதிகளுக்கு ஈடுபடாதிருப்பது மாத்திரமன்றி, சலனமற்ற தடாகத்தைப்போல் அந்தக்கரணத்தில் வியாகூலமில்லாதிருத்தலும், பிரதி பூதத்தினிடத்தும் பகவானிருக்கிறாரெனக்கண்டு கொள்ளுதலும் முக்கியங்கள். பிரதி பூதத்தினிடத்தும் நல்லதை கிரஹிக்க வேண்டும்: நாம் ஒப்புக்கொள்ளாத தோஷங்களுள்ள ஜீவர்களுக்குக்கூட நல்ல அபிப்பிராயமிருக்குமென நினைத்தல், பல ஹீனர்களுக்கு பலமான ரக்ஷணையை அளித்தல், நமக்குத் தெரிந்த உண்மையையும் பயப்படாமல் சொல்லி அதைக் காப்பாற்றுதல், கோபத்திற்கு எத்தனை காரணங்களிருக்கினும் திடமான சாந்தமுண்டாகியிருத்தல், ஸகல வெளி ஸ்திதிகளிலும் நிதானத்துடனும் சந்தோஷத்துடனுமிருத்தல், எத்தனை வேஷங்களைத் தரிக்கினும் உண்மையைக் கண்டுகொள்ளும் தீவிரமான புத்திக்கூர்மையை யடைந்திருத்தல், சலிப்பதற்கு சாத்தியமற்ற பண்படுத்தப்பட்ட புத்தி ஆகிய இவைகளையும் நாம் அடைந்திருத்தல்வேண்டும். மனிதர்களுக்குத் தோன்றக்கூடியதாய் சில பெரிய வேலை, பலவிதங்களான ஸேவைகள் அல்லது உதவிகள் எந்த இடங்களிலானாலும் தீவிரமாகவும் சுறு சுறுப்பாகவும் செய்ய அப்பியாசம் உண்டாகியிருத்தலும் அவசியமாகும்.

வஞ்சனையின்றி சக்திக்குத் தக்கவாறு உலக ஸேவை செய்தல் எல்லாக் குணங்களிலும் முக்கிய சாதனம்.

மத்தியானத்தில் சூரியனிடம் தீவிரமாகப் பிரகாசிக்கும் வெளிச்சத்தைப்போல், பகவானான ஸ்ரீ ஜகத்குருவினிடம் ஸகல கல்யாணகுணங்கள் பூர்த்தியாய்ப் பிரகாசிக்குமானபடியால், அவைகளில் சிலதேனும் நமக்கு ஏற்பட்டிருந்தாலொழிய அவரைக் குறிப்பிட்டறிய மாட்டோமானபடியால், அதை இங்கு சுருக்கமாய் வரைந்தேன்.

V. V. சிவ அவதானி.

---

# *ஸத்திய வாக்கு.

இனி ஸமூகத்தில் ஸத்திய ஸம்பாஷணை அரிதாயிருக்கிறது. பூர்வ காலத்தில் அதாவது சுமார் ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன்னர், பொய் பேசினும், வியபிசாரம் செய்யினும் வெகு பாபம் என்ற பாப பயம் இருந்தது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் கூட பொய் பேசுவதற்கு பயந்தார்கள். பொய் பேசுதல் பாபம் என்ற நம்பிக்கையும், அவ்வித பாபத்திற்கு யமனால் தண்டனை உண்டாகுமென்ற பயமும் இருந்தன. இப்பால் வரவர "யமனென்றவன் ஒருவன் இருக்கின்றானா? அவ்விதம் இருக்கின் பொய் பேசினவனுக்கு இந்த ஜன்மத்தில் எவ்வித தண்டனையுமில்லையல்லவா? இச்சரீரம் போனபிறகன்றோ யமதர்மராஜா நம்மை தண்டித்தால் தண்டிப்பார்?" முதலாயுள்ள குயுக்திகள் பிரபலப்பட்டு வந்தன.

பூர்வ காலத்தில் மூன்று வருணத்தார்களுக்கு அதாவது பிர்ம க்ஷத்திரிய வைசியர்களுக்கு உபநயனம் என்ற ஸம்ஸ்காரம் ஆனவுடன், உபநயனமானகுழந்தையை தாய்தகப்பன்மார்களிடம் வைக்காமல் குருவினிடம் ஒப்புவித்து வந்தார்கள். அக்குருவானவர் பன்னிரண்டு வருஷ காலம் பையன்களைத் தன்னிடமிருத்திக்கொண்டு, வேதங்களை அத்யயனம் செய்வித்து, பிர்ம்மசாரி ஆச்ரமத்தைக் கடந்து கிரஹஸ்தாச்ரமத்தை அவலம்பிப்பதற்காகப் பையனை அவன்து தாய் தகப்பன்மார்களிடம் அனுப்புவார். குருகுலவாசம் செய்துகொண்டிருக்கும் காலமளவும் தன் குருவான

* இஃது தெலுங்கு திவ்யஞானதீபிகையிலிருந்து பத்திராதிபரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.



வர் ஸத்திய ஸம்பாஷணை, வாத்ஸல்யாதி ஸத்குணங்களை அனுஷ்டிப்பதில் எவ்விதம் நடந்து வந்தாரோ அதை சிஷ்யன் கவனித்து, குருவானவர் நடக்கும் மார்க்கத்தைத், தான் மீறி நடவாமலே அம்மார்க்கத்தை அவலம்பித்து வருவான். ஆனாலும், வேதத்தை அத்யயனம் செய்வித்து சிஷ்யனை அவன் வீட்டிற்குத் திரும்பவும் அனுப்பும் பொழுது அப்பால் சிஷ்யன் அவலம்பிப்பதற்குச் சித்தமாக இருக்கும் கிரஹஸ்தாச்ரமத்தில் சிஷ்யன் நடந்து கொள்ளவேண்டிய கிரமத்தை ஸங்க்ரஹமாக அவனுக்கு போதிப்பார். இப்போதனைகள் தைத்திரீயோபநிஷத்து, சீக்ஷாவல்லி யென்னும் அத்யாயத்தில் தொகுத்து சொல்லப்பட்டிருக்கின்றன. அப்போதனைகளில் முதல் வாக்கியம் 'ஸத்யம்வத' என்றிருக்கிறது.

அனேக அம்சங்களை போதிப்பதற்குத் துவக்கிய குருவானவர் முதல் முதல் 'ஸத்தியத்தைப் பேசு' எனச் சொன்னதின், பின்னால் வரப்போகும் ஸகல வாக்கியங்களையும் விட ஸத்தியம் மிகவும் முக்கியமானதென விளங்கவேண்டியிருக்கிறது.

பொய் பேசுதல் பாபமென்றும், பாபம் செய்தவர்களுக்கு யமதண்டனை உண்டாகுமெனப் பெரியோர்கள் சொன்னார்களென்றும், ஸத்தியவான்கள் நிறைந்துள்ள உலகில் பொய் பேசுகிறவன் லோக அபவாதத்திற்குப் பயப்படவேண்டியிருந்ததெனவும், இவ்வித ஸ்திதிகள் பூர்வ காலத்தில் இருந்து வந்தனவென்றும் மேலே கூறப்பட்டனவன்றோ? பாரமார்த்திகமாய்ப் பார்க்கும்பொழுது "லோக அபவாத பயத்தால் பாப அனுஷ்டானமில்லாமல் இருத்தல் என்ன அவ்வளவு மேதாவித்தனம்? தனக்காக சரியன்றெனத் தோன்றாமல் இதரர்களுக்குப் பயந்து ஸத்தியத்தை அனுஷ்டிப்பவன் அவ்வளவு ஸத்புருஷனா?" என வினவலாம்.

இல்லை, உண்மையே. ஸ்வயமாய் ஸம்பாதித்ததான ஸத்குண அனுஷ்டானம் வெகு சிரேஷ்டமே. அவ்வித ஸத்குணம், அவ்வித அனுஷ்டானம் உண்டாவதற்கு முன்னர் கொஞ்சமட்டில் லோகாபவாத பயம், வெளியில் உள்ளவர்களின் பயம் இவை யெல்லாம் நீங்கவேண்டியே யிருக்கும். ஸ்ரீமத் பகவத்கீதையில் கீதாசாரியார் கூறிய ஸநாதன தர்மம்,

"ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப"

என வெகு காலம் கடந்தமையால் ஸநாதனதர்மம் நசித்துப் போயிற்று. தர்மானுஷ்டானம் செய்பவர்களுக்கு பிரபலப்பட்ட

காமாதி தோஷங்களால் ஸநாதன தர்மானுஷ்டானத்தில் உபேக்ஷை ஏற்பட்டமையால் ஸத்தியம் முதலான குணங்களில் சிரத்தைக் குறைவு ஏற்பட்டுக் கிரமமாய்க் கொஞ்சம் கொஞ்சமாய் தர்மங்களைக் கை நழுவவிட்டு வந்தார்கள். அதேவிதமாய் இப்பால் இங்கிலீஷ் பாஷையைச் சொல்லிக் கொடுத்துவந்த ஸ்கூல் காலேஜ் முதலான பாடசாலைகளில் புரொபஸர்கள் தெய்வ பக்தியாகட்டும் தெய்வத்தினிடம் விசுவாசமாகட்டும் இல்லாதவர்களாய் ஏற்பட்டார்கள். அவர்களைப்பார்த்து அந்தப்படி நடந்துகொள்ள அவாக்கொண்ட நமது (அக்கால முதலுள்ள) பாலர்கள் கிரமமாய் நகர மஹாஜனங்களானார்கள். அவ்விதமாகி கடவுளில்லை யென்பவர் சிலர், யெமதர்ம ராஜா எங்கிருக்கிறாரென்பவர் சிலர், இவ்விதம் பூர்வாசாரங்கள் பூர்வ ஸத்குணங்கள் தொலைவதற்குச் சில காரணங்கள் ஏற்பட்டன. நகரவாசிகள் மேற்கத்திய நாகரீகத்தில் தளதளவெனப் பிரகாசிக்கும் உடுப்புகள் முதலான வஸ்துக்களை ஸம்பாதிப்பதற்கு வேண்டிய தனத்தைத் தேடவேண்டி வந்தது. தனம் முக்கியமானபடியால் ஸத்தியம் முதலான ஸத்குணங்களை அவற்றின் ஸாரத்தோடு விட்டொழித்துக்கொண்டு தனத்தைத் தேடிவந்தார்கள். இங்கிலீஷ்பாஷையைப் படித்தவர்களுக்கு பெரிய உத்தியோகங்கள் கிடைத்து வந்தன. அவர்கள் வீடுகளில் ஆசிரதர்களாயுள்ள வைதீகர்கள்கூட யஜமானர்களைப்போல் ஸத்தியவாக்கில் சிரத்தைக் குறைவுண்டாகி அந்தப்படி தனத்திலேயே ருசியுள்ளவர்களாய் ஆகிவந்தார்கள்.

இவ்விதமிருக்க மேற்கு தேசத்தில் மதாபிமானமற்ற பண்டிதர்களில் சிலர், தெய்வ பக்தி இருந்தாலும் இல்லாவிடினும் ஒழுக்கம் முக்கியமென்னும் விஷயத்தைக் குறித்துக் கிரந்தங்கள் எழுதி அவ்வித பெரியோர்களின் கிரந்தங்கள் நமது தேசத்தில் கலாசாலைகளிலும் பாடசாலைகளிலும் பாடபுஸ்தகங்களாக ஏற்பட்டன. அதற்கப்பால் கிரமமாய் தண்டனையில் பயமின்றி, ஒழுக்கத்தில் விசுவாசத்துடன் ஸத்தியவாக்கில் மரியாதை பிறந்துவருகின்றது.

அஸத்தியம் பேசும்படி எவர் பிரேரேபிப்பார்கள் என்னும் பிரச்னையைக்குறித்து யோசிக்கவேண்டும். எப்பொழுதும் ஒருவன் செய்த ஸத்கார்யத்தை இதரர்களோடு சொல்லும்பொழுது வியப்பை உபயோகித்து, அவ்விதம் தான் செய்த ஸத்கார்யம் மிகவும் பெரிதென இதரர்களுக்குத் தோன்றும்



படி செய்து கீர்த்தியடைய வேண்டுமெனும் மமதை அஸத்தியமான பேச்சுக்கு ஒரு காரணம். அஸத்தியம் ஸத்தியபாவத்தைப் பெறும்படி பூச்சுப் பூசி அலங்கரித்தல், அஸத்தியப்பேச்சில் இன்னும் கொஞ்சம் நாகரீகத்தோடு கூடினதான ஸ்திதி. இதுவும் மமதை என்னும் குணத்தால் பிரேரேபிக்கப்படுவதுவேயாம். மமதை எனின் இஷ்டமான வஸ்து கிடைத்தபொழுது அந்தக்கரணம் நிகழ்ச்சி அடைந்து சந்தோஷித்தலாகும். மற்றொரு காரணம் சகித்தலின்மை. சகித்தலின்மை யெனின், ஒருவன் தனக்கு இஷ்டமான வஸ்துவை ஸம்பாதிக்க வேண்டுமென்று பிரயத்தனம் செய்யும்பொழுது மற்றொருவன் அதற்குத் தடையாகவரின் அதைக்குறித்துப் பொறுக்காதிருத்தல். சகித்தலின்மையினால் கோபாவேச முடையவனாகி ஸத்தியமான பேச்சை கவனிக்காமற் போவான். ஸகித்தலின்மையல்லாது மற்றொரு காரணமுமிருக்கின்றது. அதாவது பயம். பயமென்பது தண்டனை பயம், மானக்கேடு பயமென வர்ணிக்கத்தகும். தண்டனையை தப்புவித்துக் கொள்ள வேண்டுமென்று பொய் பேசுவார்கள். இவைகளிலுள்ள ஸாராம்சமென்னவெனின் ஸந்தோஷமுண்டானபொழுது வியப்பின் மூலமாய் பொய் பேசுவார்கள். பயம் உண்டான பொழுது தண்டனையைத் தப்புவித்துக் கொள்வதற்காகவோ அல்லது அவமானத்தைத் தப்புவித்துக்கொள்வதற்காகவோ பொய் பேசுவார்கள். இந்தப் பிரகாரம் பொய் ஸம்பாஷணைக்கு சுருக்கமாய் மமதை, சகித்தலின்மை, பயம் என்பவைகள் காரணங்கள். இன்னும் அநேக காரணங்கள் உள்ளன. இவைகளில் ஸ்வயு அபிமானம் என்பது ஒன்று. அதாவது தான் உண்மையாய் எவ்வளவு கற்றறிந்தவனோ அதைவிட அதிகமாய் இருப்பதாக இதரர்களுக்கு வெளியிட்டுக் காட்டவேண்டுமெனும் ஆசை. இதுவும் ஒருவித போலி நடிப்பேயாகும். போலி நடிப்பு மமதைக்குத் துணையாகும். தான் உண்மையில் எவ்வளவு கற்றறிந்தவனோ அதை விட அதிகமாகக் கற்றறிந்த தன்மை இருப்பதாகப் பொய் பேசுவதில் ஒரு சிக்கு உண்டு. இன்று சொன்ன பொய்யையே மற்றொரு ஸ்தலத்தில் மற்றொருவருடன் தன் கற்றறிந்த தன்மையை வெளியிட்டுக் காட்டவேண்டிய பொழுது, இன்றைய பொய்யையே அதிகம் குறைவில்லாமலே சொல்லவேண்டும். இல்லையேல் முன் வெளியிட்டுக்காட்டிய பெருமைக்கும் இப்பொழுது சொல்லும் பெருமைக்கும் ஏற்

றும் தாழ்ச்சியிருந்து, இதரர்கள் கண்டுகொள்ளின் மானக்கேடு உண்டாகும். மானக்கேட்டிற்குப் பயந்து முந்திய பொய்யை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தப் பிரகாரம் தனது பிரபாவத்தை வெளியிட்டுக் காட்டக் கோருபவன் பலர்களுடன் பல ஸந்தர்ப்பங்களில் பலவிதமாய் பல விடங்களில் பஹிரங்கப் படுத்திக்கொள்ளும் இச்சையுள்ளவனாவன். இவ்வளவு ஸந்தர்ப்பங்களிலும் தான் முதல் முதல் சொன்ன அஸத்தியத்தை விவரமாகப் பரிபூரணமாய் ஞாபகப்படுத்திக்கொண்டு மீள மீள முதல் அஸத்தியத்திற்கு ஒத்த விதமாய் பொருத்தமாகவே வசனிக்க வேண்டும். இல்லாவிடில் மானக்கேடு. இவையெல்லாம் ஒரு பொய்க்கு ஸந்தர்ப்பப்பட்டவனுக்கு மாத்திரமே ஏற்படும். பொய் பேசுவதற்குத் தொடங்குபவன் அபரிமிதமாய் பொய் பேசுவான். ஒவ்வொரு பொய்யும் அதன் விவரங்களோடு கூட ஞாபகத்தில் இருத்திக்கொண்டு அவ்வித பொய்யை மீளவும் சொல்லக்கோரும் பொழுது கொஞ்சமேனும் முன் பொய்க்கும் இப்போதைய பொய்க்கும் வித்தியாசம் காணப்படாத விதம் ஜாக்கிரதையோடு பொய்யை திருத்திச் சொல்லவேண்டியிருக்கும். இதர வேலைகளை விட்டு தான் பேசிய நூறு பொய்களை மீள மீள அழுத்தி அதே ரூபமாய் இனிமேல் சொல்லவேண்டியதாக ஏற்படும். இது வெகு துக்கரம். ஆனாலும், கஷ்டமின்றி பொய் சொல்லமுடியும் என்னும் ஒரு அஹம்பாவம் ஜனித்து சந்தோஷிக்கக்கூடும். இப்படிப்பட்டவர்கள் இந்த ஸமயம் அனேகர்களிருக்கிறார்கள்.

மூடதை, சகித்தலின்மை என்னும் இரண்டும் அஸத்தியப் பேச்சிற்குக் காரணங்களெனச் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது. மூன்றாவது காரணம் மீந்திருக்கின்றது, அது பயமாகும். ஏதேனும் தப்பான காரியம் ஒருவன் செய்தபொழுது அந்தத் தப்பான காரியம் வெளிக்கு வந்தால் தனக்கு அதனால் அவமானமோ தண்டனையோ உண்டாகுமெனும் பயம். பயத்தால் தான் செய்த பிழையை மறைத்து பிழை செய்யாததாகவே பேசவேண்டும், இது அஸத்தியப் பேச்சு.

யஜமானனாகிலும், தாய்தகப்பன்மாராகிலும் உலகோராகிலும் தாங்கள் எப்பொழுதும் தப்பான காரியங்களை செய்யவே மாட்டோம் என்று இடாபலமுள்ளவர்களாகி, தப்பு செய்தவர்



களை அவமானப்படுத்துதல், தண்டித்தல், பரிஹாஸம் செய்தல் முதலாயுள்ள விதங்களால் மானக்கேட்டை விளைவிப்பார்கள். அதனால் மான பயம். அல்லது தண்டனை பயம் இவைகளுக்குப் பயந்து, பிழைகளை மறைத்து வைத்துக்கொள்ளும் ஆசையோடு பிழைகளைச் செய்யவில்லையென்ற பொய்யைப் பேசுவார்கள்.

இப்பொழுது வயது முதிர்ந்தவர்களாகி பொய் பேசுபவர்கள் தண்டனை, மானக்கேடு இவைகளால் பொய் பேசுபவர்கள் என்று கவனித்தோமல்லவா? பயத்தால் பொய் பேசும் துராசாரம் பள்ளிக்கூடத்தில் துவங்கியதென்பது ஸ்பஷ்டம். பள்ளிக்கூடத்தில் சிறுவன் பாடத்தை நன்றாய் ஒப்பிக்காமல் போனபொழுது பிரம்படி லபித்துவந்தது. மூடர்கள் உபாத்தியாயர்களாக ஏற்பட்டு,

“லாலநாத்பஹவோதோஷாஸ்தாடநாத்பஹவோகுணா:|
தஸ்மாத்புத்ரஞ்ச ஷிஷ்யஞ்ச தாடயேந்நதுலாலயேத்” ||

என்னும் பிரமாணத்தை அனுசரிப்பார்கள். அடிக்குப் பயந்து சிறுவன் தன் வீட்டில் பாடங்களைப் படிக்காமற் போனதற்கு ஏதோ ஒரு அஸத்தியமான காரணத்தைச் சொல்வான். அதனால் அந்த தண்டனை அந்த ஸமயத்துக்குத் தப்பும். இவ்விதம் மீள மீள தண்டனையைத் தப்புவித்துக்கொள்வதற்காகப் பொய் சொல்லிவந்து, பாலர்களுக்குப் பொய் பேசுதல் என்னும் பழக்கம் ஜனித்து வரும். இதற்கு உபாத்தியாயர்கள் காரணம்.

மேற்கு தேசங்களில் சில புரொபஸர்கள் பாலர் பாலிகைகள் எதற்காகப் பொய் பேசுகிறார்களென விசாரித்து அதற்குக் காரணங்களை கவனித்து வந்தார்கள். அவர்கள் பரிசீலனையில் சில காரணங்கள் ஏற்பட்டன.

ஏழு எட்டு வயதுள்ள பாலர்கள் தாங்கள் பொய் பேசுவதற்கு தண்டனை பயம் காரணமென்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். ஏழெட்டு வயதுள்ள பாலர் பாலிகைகள் நகைக்காகிலும் தின்பதார்த்தங்களுக்காகிலும் சுலபமாய் ஸம்பாதிப்பதற்காகப் பொய் பேசுவோமெனச் சொல்லிக்கொண்டார்கள்.

ஒன்பது வயதுள்ள பாலிகைகள் தங்கள் கூட்டாளிகள் சொன்ன பொய்களை மறைப்பதற்காகப் பொய் பேசினோமென்றும்,

தாங்கள் பொய் பேசியபொழுது தங்கள் தாய்கள் தமக்கைகள் முதலானவர்கள் "பலே நன்ருய் பொய் பேசினுய்" என ஆமோதித்தமையால் பொய் பேசுவதில் ஸ்திரப்பட்டோமென ஒப்புக் கொண்டார்கள்.

பதினென்று, பன்னிரண்டு வயதுள்ள பாலிகைகள் தரித்திர தோஷத்தால் பொய் பேசுவோமெனச் சொல்லிக் கொண்டார்கள். அதே வயதுள்ள பாலர்கள் தங்கள் கூட்டாளிகளைவிடத் தாங்கள் புத்திசாலிகளெனக் காட்டிக்கொள்வதற்காகப் பொய் பேசினுர்களாம். இந்த வயதில் பொய் பேசுவதற்குக் காரணம் அவ்வளவாக பயமில்லையே ஒழிய ஆசையே காரணமென்ருர்கள். இன்னும் சிலர் எங்கள் பெரியோர்கள் பொய் பேசினதை நாங்கள் கண்டுகொண்டு அவ்வித பெரியோர்கள் பொய் பேசும்பொழுது நாங்கள் ஏன் பொய் பேசப்படாது எனப் பொய் பேசுகின்ருேமென்ருர்கள்.

பதினைந்து வயதுமுதல் இருபது வயதுவரைக்கும் உள்ள பாலர்களையும், பாலிகைகளையும் பரிக்ஷித்து கவனித்த பொழுது, ஸ்திரீ புருடர்களுக்குள்ள காமவேகத்தின் சேஷ்டைகளை இதரர்கள் தெரிந்துகொள்ளக் கூடாதென்று பொய் பேசுவோமென ஒப்புக்கொண்டார்கள்.

புரொபஸர்கள் சங்கம் கூடிச் செய்த தீர்மானங்களில் பாலர் பாலிகைகள் அஸத்திய சம்பாஷணையை அப்பியசித்ததற்கு தாய் தந்தைகளே காரணமெனத் தீர்மானித்தார்கள். தாய் தந்தைகள் தாங்களே பொய் பேசாமலும் தங்கள் குழந்தைகள் பொய்பேசிய பொழுது பொய்யால் உண்டாகும் அவமானத்தை பாலர்களுக்கும் பாலிகைகளுக்கும் சிநேக பாவத்தோடு தெரிவிக்காமலும் போவதால் கீழ்ப் பரம்பரைகளிலும் அஸத்ய வார்த்தையின் அப்பியாசம் அதிகமாகிக்கொண்டுவரும்.

வேதத்தை அத்யயனம் செய்து கிரஹஸ்தாசிரமத்தை அவலம்பிக்கப் போகும் சிஷ்யனுக்கு குருவானவர் அளிக்கும் முடிவான உபதேசத்தில் 'ஸத்யம்வத' என்பது எதற்காக முதலாவதாய் ஏற்பட்டதெனும் காரணத்தை விசாரிக்க வேண்டும்.

"𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 𑌜𑌯𑌤𑍇 𑌨𑌾𑌨𑍃𑌤𑌂",
𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌤𑌤𑍋 𑌦𑍇𑌵𑌯𑌾𑌨𑌃"



என உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸத்தியமே ஜயிக்கும். அஸத்தியம் ஜயிக்காது. ஸத்தியமான மார்க்கம், தேவதைகளின் உலகங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்குமெனக் கருத்து. பொய்யை அனேகங்களாக மாற்றக்கூடுமே ஒழிய ஸத்தியத்தை மாற்றுவதற்குச் சாத்தியமன்று. ஆனது பற்றி எந்த வித்தைகளை அப்யாசம் செய்தவனுனாலும் ஸத்தியத்தைக் கைவிடாமல் எத்தனை ஸ்தலங்களில் எவ்வளவு பெயர்களுடன் உரைக்கினும் ஒரே விதமாகவே சொல்வான்.

பரபிரம்மம் ஸத்யம். 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌅𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 என்று இருக்கிறது. ஸத்தியத்தையே அப்பியசிப்பவன் சின்ன ஸத்தியம், பெரிய ஸத்தியம் இன்னும் அதைவிட பெரிய சத்தியம் இவ்விதம் படித்தரங்கள் ஒழிந்து ஸத்தியத்தை அப்பியசித்துக் கொண்டு ஸத்தியத்தோடு கூட்டுறவையடைந்து முடிவில் கிரஹஸ்தாசிரமத்திலேயே 𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑌸𑌤𑍍𑌯𑌂 என்னும் பரப்பிரம்மத்தை அணுகலாமென்ற உபாயத்தைக் குருவானவர் சூசிப்பிப்பதற்காக "𑌸𑌤𑍍𑌯𑌂𑌵𑌦" என்ற உபதேசத்தை ஆரம்பித்தாரென எண்ணுகிறேன்.

𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑌤𑍍𑌯𑌂 ।
𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑍋𑌨𑌿𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌞𑍍𑌚 𑌸𑌤𑍍𑌯𑍇 ॥
𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌋𑌤𑌸𑌤𑍍𑌯𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 ।
𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 ॥

ஸ்ரீ தாராம்.

# * தாரக சங்கக் கூட்டம்.

## அக்கிராசனதிபதி டாக்டர் பெஸண்டம்மையார் அவர்களின் உபந்யாஸம்.

"இன்று நாம் இங்கு கூடியதற்குக் காரணம் நீங்களெல்லோரும் அறிவீர்கள். ஜகத்குரு இவ்வுலகில் அவதரிக்கும்பொழுது

* 1926ளு டிஸம்பர்மீ 28உ ஒஹாய் என்னுமிடத்தில் நடந்த தாரகசங்கக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட உபந்யாஸங்களின் சங்கிரஹம், தெலுங்கு திவ்யஞான தீபிகையில் வெளியானதை அனுசரித்து பத்திராதிபரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

நம் கிருஷ்ணஜி அவர்களின் சரீரத்தை உபாதியாகக் கொள்ள ஏற்படுத்தியதாக பலர்க்கு முதல் முதல் தெரிந்தது. டிஸம்பர் 28ம் தேதியாகும். அதனாலேயே, அது தொடங்கி அந்நாள் மிகவும் பிரேமையுடனும், எதிர்பார்த்தலோடும் கவனிக்கப் படுகின்றது. பிரேமை எப்பொழுதுமுள்ளதே. அந்நோக்கம் இன்று சபலமாயிற்று.

“இன்று ஜகத்குருவின் வருகையைக் குறித்துச் சொல்ல எண்ணியிருக்கிறேன். சில மாதங்களாக எல்லோரும் ஜகத்குரு எவ்விதம் அவதரிப்பாரென வினவுகின்றார்கள். அவர் எவ்விதம் அவதரிப்பாரோ ஸ்பஷ்டமாய்த் தெரியாதென நான் அவர்களுக்கு பதிலளித்திருக்கின்றேன். பூர்வம் பாலஸ்டைனில் ஜகத்குரு அவதரித்தபொழுது நானாகட்டும் என் ஸகோதரர் லெட்பீட்டராகட்டும் அந்த தேசத்தில் ஜீவித்திருக்கவில்லை. அக்காரணத்தால் அந்த அரிய விஷயத்தைக் குறித்து எங்களிருவருக்கும் கூட ஸ்வானுபவமில்லை. ஆனால் அன்று பாலஸ்டைனில் என்ன நிகழ்ந்ததென்பதை அப்போதைக்கப்போது யோகதிருஷ்டியால் பார்த்துக் கொண்டிருந்தோமே யொழிய, அதனால் அவ்வளவாக பிரயோஜனமுண்டாகவில்லை. ஏனெனில், அந்நாள் பிரஜைகள் தங்களில் ஒருவராக அவதரித்த அம் மஹானைக் குறிப்பிட்டறிந்துகொள்ள மாட்டாதபடி எங்களுக்குப் புலப்பட்டாலும், மஹா புருஷனது சரித்திர விவரங்களைத் தெரிந்துகொள்ள யோகதிருஷ்டி தோன்றல் அபசாரமாக எங்களுக்குத் தோன்றிற்று. நான் இவ்விஷயமாய் யோசித்து, அவர் தனது உபாதியாக ஏற்படுத்திக்கொண்ட சரீரம் அதற்குத் தக்கவாறுள்ளதாயிருக்கின், அதனிடம் கிரமக்கிரமமாய் மஹாவேசத்தை யடைவாரென ஊஹித்து, எனது அபிப்பிராயம் இதுவென இதுவரைக்கும் அனேக தடவைகள் சொல்லியிருக்கின்றேன். லெட்பீட்டர் கூட இவ்விதமே சொல்லியிருக்கின்றார். பின்னர் சென்ற கோடைகாலத்தில் லண்டனில் இவ்விஷயமாக உபன்யாசம் செய்தபொழுது ஸ்தூல மானவீக சாஸ்திரங்களில், ஒரு சரீரத்தில் இரண்டு ஜீவர்கள் வியவகரிப்பதற்கு அவகாசமிருக்கின்றதென அந்த சாஸ்திரிகள் அங்கீகரித்ததாகச் சொல்லியிருக்கின்றேன். இந்த அவதாரம் கூட அவ்விதமே இருக்குமென எண்ணிக்கொள்வோம். அ[illegible] ஸம்பவம். நிகழ்ந்துகொண்டிருக்கும் சந்ததிகளே [illegible]



[illegible]யமாகவும், கவனித்துப் பார்ப்பதைவிட வேறெதுவும் செய்ய மாட்டாதிருந்தேன். அவ்வித மஹானின் சரிதைகளின் விஷயமாய் எவ்விதமேனும் நிச்சயித்து நிர்ணயம் செய்தல் எவருக்கும் ஸாத்தியமன்று. இப்பரிசிலனையால், இது வரைக்கும் எண்ணியபடி ஸ்ரீ ஜகத்குரு ஒரு சமயம் தன் உபாதியில் பிரவேசித்தலும், மற்றொரு சமயம் விட்டுவிடுதலும் இராதெனக்கூட நினைக்கின்றேன். ஜகத்குருவின் பிரக்ஞையும், அவர் சிஷ்யனது பிரக்ஞையும் கிரமக்கிரமமாய் ஐக்கியமடைகின்றன. அதாவது மானிட தத்துவம் ஈசுவர தத்துவத்தை அடைகின்றதெனச் சொல்லத்தகும்.”

பின்னர், அம்மையாரவர்கள், இப்பொழுது நிகழ்ந்துகொண்டுவரும் இப்பிரக்ஞையின் லயத்தை நாம் ஊஹிக்கமாட்டோமென்றும், வாரவாரத்திற்கு அது அதிகமாகிறதென்றும், சொன்னார்கள். மேலும் அம்மையாரின் அபிப்பிராயமே சரியாகின், கிறிஸ்து அவதரித்தபொழுது அவர் ஸன்னிதியில் இருந்தவர்கள் அவர் தத்வத்தை எதற்காகக் குறிப்பிட்டறியமாட்டாமலிருந்தார்களோ அதை சுலபமாய் நாம் அறியக்கூடுவோமெனவும், அப் பரமன் இவ்வுலகில் அவதரித்தபொழுது அவர் வெளிஸ்வரூபத்தைப் பார்க்கக் கூடிய, ஸன்னிதானத்திலுள்ளவர்களாயினும் அவரது அந்தரங்க மான்மியத்தைத் தெரிந்துகொள்ளக் கூடவர்களோ யில்லையோ அதைப்பற்றி அவரது தத்வ ஸ்வரூபத்தை அறியக்கூடியவர்களாவார்களென்றும் சொன்னார்கள்.

மேலும், “யார் எவ்வளவு வரைக்கும் (உண்மையாக) பார்க்கக்கூடவர்களோ அவரவர்களுக்கு கொஞ்சமட்டில் அவரது அவதார ரகசியம் மனதில் ஸ்புரிக்கும். நான், இமயமலை ஆசிரமத்திலுள்ள இப்பரம குருவை பிரத்யக்ஷமாய் அறிவேன்; அங்கு அவர் இந்த உலகில் அவதரிப்பேனென வாக்களிக்கும் பொழுது கேட்டேன். இங்கு கிருஷ்ணஜியோடிருந்து, இவ்வளவு காலம் அவரைப் பிரேமித்து வருகின்றேனாகையால், அவரிடம் அந்த மஹா பிரபு அவதரிப்பதைப் பார்க்க எனக்கு எவ்வளவு ஆனந்தமாகின்றதோ அதை நான் சொல்லத் தேவையில்லை” என முடித்தார்.

## ஸ்ரீமான் கிருஷ்ணஜி அவர்களின் உபந்நியாசம்.

தமது நம்பிக்கையைக் குறித்தும், நம்பிக்கையாலுண்டாகும் [illegible]களினின்று தப்புவித்துக்கொள்ளும் மார்க்கத்தைக்குறித்தும்.

இப்பொழுது சொல்லப்போகின்றேன். வருஷக் கணக்கான காலம் செல்லவே நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மஹத்தான விஷயம் சமீபிக்கின்றது. அவ்விஷய தத்வத்தை அறிந்தவர்களிடத்தும், தூரத்தினின்று காதில் விழுந்துவரும் பெருங் காற்று மழையின் மர்மதொனிகளைக் கேட்கக்கூடியவர்களிடத்தும் ஸ்பஷ்டமான மாறுதல்கள் காணப்படுகின்றன. இப் பெருங் காற்று மழை பர்வதசிகரத்திலுண்டாகி அதன் தொனி கீழ் ஸமப் பிரதேசத்தில் கேட்கும் மாதிரியாக இருக்கிறது. மலையர்களும், உயர்ந்த இடங்களில் வசிப்பவர்களும் அகஸ்மாத்தா யுண்டாகும் பெருங் காற்று மழையினின்றும், புயல்காற்றினின்றும் தப்புவித்துக்கொள்ளும் வழிகளை யறிந்திருப்பார்கள். அவர்கள் தங்கள் பலத்தை யறிந்து அவைகளுக்குத் தக்கவாறு சித்தமுள்ளவர்களா யிருந்து, அந்த உன்னதப் பிரதேசங்களில் ஸ்திரமான விடுதிகள் ஏற்படுத்திக் கொண்டார்களே யொழிய பள்ளத் தாக்குகளிலும் ஸமபூமிகளிலும் வசிப்பவர்கள், தங்கள் பலத்தையாகட்டும், பெருங் காற்று மழையின் பலத்தை யாகட்டும், தெரியாதவர்களானபடியால், பெருங்காற்று மழை வந்தபொழுது எவ்விதம் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமோ அதை அறியமாட்டார்கள். மழை வந்தபொழுது வீடு மூடவும், பெருங் காற்றுமழை வந்தபொழுது அஸ்திவாரமும் செய்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென மாத்திர மறிவார்கள்.

அந்த தூர தொனிகளைக் கேட்டவர்கள், தங்கள் பலத்தையே, தங்கள் அன்பையே, தங்கள் சினேகத்தையே நம்பிக்கொண்டிருக்கவேண்டும்; சாசுவதமானவற்றைப் பலப்படுத்திக்கொண்டு, சாசுவதமல்லாதவற்றை நசிக்கச் செய்தல் வேண்டும். இந்த சூர்யாஸ்தமனத்தைப் பார்க்கினும், தூரத்தினின்று ரோஜா வர்ணமுள்ள பர்வத வரிசைகளைப் பார்க்கினும், அவற்றின் மனோகரமும் சௌந்தரியமும் ஒருவர் சொல்லாமலே, யதார்த்தமென எவ்விதம் நம்புவோமோ, அவ்விதமே அந்த உண்மையைக் கண்டபொழுது நிஜமென நம்புவோம். இந்த ஸத்தியம் ஸ்வசித்தமும், பரிபூர்ணமும், நிராடம்பரமும் ஆவதால் அதற்கு நாசமில்லை. ஒரு ஆவர்த்தி இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளின், அந்த ஸ்தானத்தில் வேறொரு உண்மை உங்களுக்குப் புலப்படமாட்டா. அது நீங்கள் ஸம்பாதித்த ஸத்தியமாகையால் அதனிடம் அழகிருக்கின்றது. அந்த ஸத்தி



யத்தை நாமெல்லோரும் அடைய வேண்டுமென இச்சிப்பதும், நமது கைப்பிடியையே ஆதாரமாகக் கொண்டதும், ஆனந்தத்தை அளிப்பதும், துக்கத்தையாகட்டும், மரணத்தையாகட்டும், வேறெந்த இதர சாசுவதமற்ற வஸ்துவையாகட்டும் அறியாததாகியுமிருக்கிறது. அந்த ஸத்திய அநுபவம் உதித்ததுக்குப் பிரமாணம் தேவையில்லையே யொழிய ஸமபூமியில் வசிக்கும் நமக்கு பலம் அவசியமாக இருக்கவேண்டும்; அதைவிட விசேஷமாய்ச் சரியான திசையைப் பார்க்கும் கோரிக்கையிருத்தல் வேண்டும்.

பார்க்கப் பார்க்க இந்த அவதார ஸமயத்தில் எவ்வித மஹாகாக்ஷிகளும், அற்புதங்களும், தோன்றுமெனத் தோன்றுகின்றனவேயொழிய புத்த தேவர் அவதரித்தபொழுதிருந்தது போலவே, ஒவ்வொருவருடைய மனதிலும் ஹிருதயத்திலும் பிரபோதமும், பலமும், ஸ்த்தியத்தினுடையவும், ஞானத்தினுடையவும், நிச்சயமுமுண்டாகும். புத்த தேவர் ஒவ்வொருவனுக்கும் போதப்படக் கூடியதாய், சுலபமும், மிகவும் தெளிவும், சாசுவதமாயுமுள்ள ஜீவித ரகசியத்தை உபதேசித்தாராயினும், அநுபவிகளுக்குக்கூட அந்த உபதேசத்தை, அநுஷ்டிப்பதற்குக் கஷ்டமாயிற்று. இன்று கூட அவ்விதமேயிருக்கும். அற்புதங்கள் ஸம்பவிக்கின் பார்க்க வேண்டுமென்றுவது, அவசியமாய் தமது பாவங்கள் கொதிப்பை அடையுமென்றுவது எண்ணுபவர்கள் சுலபமாயினும், பரிபூர்ணமான அந்த உபதேசத்தை கிரஹிக்கமாட்டார்கள்.

ஆனதுபற்றியே நம்மில் மலைச்சிகரத்தின்மீது கெட்டியான கல்லில் போட்ட அஸ்திவாரங்களுள்ள வீடுகளில் இருப்பவர்கள் கீழே ஸம பூமிகளில் இருப்பவர்களைக் கூச்சல் போட்டு உறக்கத்தைவிட்டெழுந்திருக்கச் செய்து பெருங்காற்று மழை வருகின்றதெனத் தெரிவித்தல் அவசியமாயிருக்கிறது. அப் பெருங் காற்று மழை நாசம் செய்வது மாத்திரமன்றி, புனர் நிர்மாணம் கூட செய்யும். பெருங்காற்று மழை வந்தபொழுது, பலஹீனமாயுள்ள செடிகள் ஸமூலமாக ஒடிந்து தலைகீழாகப்போய், பெருங் காற்று மழை நின்றபின்னர், புதுச்செடிகள் வெளிப்பட்டு, அவைகளின் மீதிருந்து புதிய பக்ஷிகள் கானம் செய்து சாந்தியை விளைவிக்கும். அவ்வித உண்மையிருக்கிறதெனவும், அதைத் தெரிந்துகொள்ளல் சாத்தியமெனவும், ஒரு தரத்தார் மற்றொரு தரத்தா

ருக்குப் பரம்பரையாய் அந்த உண்மையைத் தெரிவிக்கக்கூடும். தெரிந்தவர்கள் அஸத்தியமானவற்றை நாசஞ் செய்வதற்கு பலத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஒன்றாயுள்ள பற்றுதலையும் ஒன்றேயாகும் முக்தியையும், ஒன்றேயாகும் உபதேசத்தையும் நம்மில் நாம் குறிப்பிட்டறியவேண்டும். சௌந்தரியமே ஸத்யம். அந்த உண்மையை நம்மைச் சுற்றிலும், அற்ப வஸ்துக்களிலும், குரூர வஸ்துக்களிலும், பாபிகளிடத்தும் கூட, நாம் பார்க்கக்கடவோமாகில், புலப்படுமே யொழிய தூரத்திலுள்ள பர்வத சிகரங்களின்மீது இருந்துவரும் கெர்ஜனையின் ஆரவாரத்தைக் கேட்டிருந்தவர்களைத்தவிர இதரர்களுக்கு அந்த உண்மையை அறிய சாத்தியமன்று. அத்தொனியை ஒரு தடவை கேட்டவர்களின் ஹிருதயவாசல் திறந்து, மனம் நிர்மலமாகும். அவர்கள் நிரந்தரம் மாறுதல் அடைந்துகொண்டு, ஸாமர்த்தியமுள்ள வரைக்கும் சங்கற்பித்து நிர்மாணஞ் செய்துகொண்டிருப்பார்கள்.

ஜகத்குரு அவதரிப்பதால் உண்மையான நோக்கம் பின்வருமாறு:—அவர் நம்மை விட்டுச் சென்ற பின்னர் அவரைப்போல் நடத்தல் அதாவது அவர் நடமாடின புண்ணிய பூமியைப் பூஜித்துக்கொண்டு செல்வது மாத்திரமேயல்லாமல், நாம் நடந்த பூமி நமக்கப்பால் புண்ணிய பூமியாக இருக்கக்கூடியதாய் நாம் கூட பவித்திரமுள்ளவர்களா யாகவேண்டும். அவ்விதம் ஆகுவதிலேயே அவர் அவதார மஹிமை யெல்லாமிருக்கின்றது. பலமுள்ளவர்கள் இன்னும் விசேஷ பலத்தை சம்பாதிக்கவேண்டும். பிரேமையுள்ளவர்கள் இன்னும் அதிக பிரேமையைச் சம்பாதிக்கவேண்டும். இல்லையேல் பெருங்காற்று மழை வந்தபொழுது பலக்குறைவாயுள்ள செடிகள் ஒடிந்து விழுந்துபோய் பலமுள்ளவைகளும் ஆழமாய் வேர் இறங்கியவைகளும் மாத்திரம் மீதியாக நிற்கும். அவர் வருகையில் நமக்களிக்கும் உபதேசம் அதுவேயாகும். அவ்வருகைக்குப் பிரமாணம் வேண்டின் அதுவே பிரமாணம். சூரியாஸ்தமனம் சொகுசா இருக்கிறதென்பதற்கு பிரமாணம் வேண்டுமா? அதில் சௌந்தரியமிருக்கிறதென்றும், உண்மையிருக்கிறதென்றும் நாமறிவோம். நமக்கெவரும் சொல்லி நம்பும்படி அவசியமில்லை.

ஸகலவஸ்துக்களிலும் அந்த சௌந்தரியத்தை [illegible] மாத்திரமே, அந்த சௌந்தரியத்தை யனுசரித்து [illegible]



இதரர்களுடைய ஹிருதயங்களில் அந்த சௌந்தரியத்தை விகஸிக்கச் செய்யவும் அவசியமென ஒப்புக்கொள்ளும் வரையில் மாத்திரமே நம்மில் ஒவ்வொருவருக்கும் அவரது அவதாரதத்துவம், அவரது சந்தோஷம், ஆனந்தம் ஹிருதயத்தில் புலப்படும்.

ஜி. வி. சுப்பராவ்.

---

# புனர்ஜன்ம விவேகம்.

மானிடர்கள் தற்காலம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் நான்கு. அவையாவன:—

(1) புனர் ஜன்மம் உண்டு எனும் அறிவு (2) கர்ம நியதி, நல்லது செய்தால் நல்லது விளையும் அல்லது செய்தால் அல்லது விளையும் எனும் நிச்சயம். (3) முக்தர்கள் இருக்கின்றார்கள், ஒவ்வொருவருக்கும் தக்க அறிவை யூட்டி முக்தி நெறிக்குக் கொண்டுபோக கை கொடுக்க எப்போதும் காத்திருக்கின்றார்கள் என்கிற உண்மை. (4) முக்தியைக்கொடுக்கும் மார்க்கம் ஒன்றுண்டென்னும் நிச்சயம். இந்நான்கும்,

ஆனவம் மனைவி மக்க ளர்த்தவீ டுலகென் றூன்றிற்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடு மான்போற்

ஓடுபவனுக்கு அத்தியாவசியமா யிருக்கின்றன. இவற்றில் முதல் இரண்டும் சாதாரணமான ஜனங்களுக்கு வேண்டியவை. யாதொரு கஷ்டமுமில்லாமல் உலகில் நல்லவர்களாயிருந்துகொண்டு, அப்படியே ஜன்ம ஜன்மங்களாக பிரபஞ்ச முறையின் சாதாரண வழியில் போய்க்கொண்டிருப்பவர்களுக்கு முதல் இரண்டும் தேவை. மற்றிரண்டும் குறுக்குப்பாதையாகவும் வெகு நெட்டாகவும் இருக்கும் முக்தி மார்க்கத்திற்குப்போக வாஞ்சைகொண்டு முக்தர்களில் ஒருவரை குருவாகக்கொண்டு மார்க்கத்தைப்பற்றிய உபதேசங்களைப் பெற்றுக் கடைத்தேறுபவர்களுக்கு வேண்டியவை.

இந்நான்கில் முதலாவதான புனர்ஜன்மம் உண்டு என்பதால் நமக்கு என்ன ஆதாயம் என்பதைக் கொஞ்சம் விசாரிப்போம். மனிதன் என்று சொல்வது, ஜீவாத்மா ஜீவசஞ்சாரமுறையில் வந்திருக்

கும் ஓர் படி; அதாவது விலங்காயிருக்கும்போது பஞ்சீகரணத்தைப் பெற்று ஆறாவதான மனதை மானிட வர்க்கத்தில் எடுத்து, காட்டுமிராண்டியானது முதல், படிப் படியாய் சீர்திருத்தப்பட்டு மேலுக்கு நல்வவனாக வந்து ஜீவன்முக்தியடையும் வரையில் ஜீவாத்மாவை மனிதன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகலால் தற்காலத்திலுள்ள ஜனங்களை எல்லாம் தூக்கி அந்தந்த அந்தஸ்திற்குத் தகுந்தபடி வகுப்போமானால் கீழ்ப்படியாகிய காட்டுமிராண்டி முதல் முக்தர்வரைக்கும் ஜனங்கள் அடுக்கடுக்காயுள்ளதைப் பார்க்கலாம். இந்த அடுக்கை உற்று கவனித்தால் பள்ளிக்கூடத்திலிருக்கும் வகுப்புகள்போலக் காணலாம். காட்டுமிராண்டிகள் "மாண்டசூரி" பள்ளிக்கூடப் பிள்ளைகளைப் போலவும், மற்றவர்கள் முதல் வகுப்பு முதல் பத்து வரையில் சாதாரண ஜனங்களாகவும், அதற்குமேல் பக்தி அபிமானமுள்ளவர்களாகவும், இன்னும் விசாரணை செய்துகொண்டும் சாதன சதுஷ்டயத்தைக் கையாடிக்கொண்டும் ஜனங்கள் படிப் படியாய் இருக்கின்றார்கள். இவர்களுக்குமேல் செனட் (Senate) என்று சொல்லும் முக்தர்கள் இருக்கிறார்கள்.

இப்படி அடுக்கடுக்காயிருப்பதால் எப்படி பள்ளிக்கூடத்துப் பிள்ளை ஒரு வகுப்பிலிருந்து அடுத்த மேல்படிக்குப் போவானோ அப்படித்தான் ஜன்மாந்தரத்திலும் ஜீவன் படிப்படியாய் ஏற வேண்டியிருக்கிறது. இதுதான் விகாஸ முறையின் கிரமமான படி. ஆனால் சில சமயங்களில் அக்கிரமச் செய்கையினால் எப்படி ஒரு பையனை கீழ் வகுப்பிற்குத் தள்ளப்படுகின்றதோ அப்படி மானிட ஜன்மத்திலும் கீழ்ப்படிக்கு ஒருவனை தள்ளவேண்டி நேரிடும். ஆனால் இது அவனது அக்கிரம கர்மத்தைப் பொருத்தது. இதைத் தவிர மூன்றாவது விதி ஒன்று இருக்கின்றது, அதாவது பற்று. சிநேகிதப் பற்று, நேசப் பற்று, (குரு) ஆசாரியப் பற்று, பந்துத்துவப் பற்று (இவைகளை பொன் விலங்குகளென்று சொல்லலாம்) துவேஷம், பகை, வெறுப்பு இவைகளை பற்றென்று கூறாவிட்டாலும் பற்றுதான், (இரும்பு விலங்கு என்று சொல்லலாம்). ஏனெனில், எப்படி நேசப்பற்று நேசன் இருக்குமிடத்திற்கு இழுத்துப்போகுமோ அப்படியே பகையும் பகைவனிருக்குமிடத்திற்குக் கொண்டுபோகும். ஆதலால் புனர்ஜன்மத்திற்கு மூன்று முக்கிய நியதிகள் உண்டு. அவையாவன:



210816

1. விகாஸ முறையின்படி படிப் படியாய் மேலுக்குப் போவது.
2. கர்ம வினையின்படி இடம் அமைக்கப்படுவது.
3. பற்று இருக்கும் தீவிரத்தின்படி பந்துத்வ சிநேகித [illegible] சூழ்ந்திருக்கப் பெறுவது.

இம்மூன்று விதிகளில் முதல் விதி கடவுளின் திருவுள்ளத்தின்படியிருக்கும் விகாசமுறையில் ஒட்டியிருப்பதால் இதைத்தான் முதலில் கவனிக்கப்படும். பிறகு இரண்டாவதை கவனித்து இவன் எவ்வளவு தாங்கக்கூடுமோ அதை மாத்திரம் பிராரத்துவமாக்கி மற்றதை இவன் தாங்கக்கூடிய சக்தி வரும் வரையில் சஞ்சிதமாக களஞ்சியத்தில் வைத்திருக்கப்படும். மூன்றாவது காலத்தைப் பொருத்தது. அதாவது இவனோடு பற்றுள்ளவர் அச் சமயத்தில் ஜனனம் எடுப்பவர்களாயிருக்கவேண்டும்; அப்போதுதான் சேர்ந்து வருவார்கள்.

முதல் விதி ஒருவர் அடைந்துவந்திருக்கும் தேர்ச்சியைப் பொருத்தது. எப்படி பள்ளிக்கூடத்தில் தேர்ச்சியை கவனித்து பையனை வகுப்பில் வைக்கப்படுகின்றதோ அப்படியே ஜன்மத்திலும் அவனுக்குத் தகுந்த படியிலுள்ள ஜனங்களிடத்தில் அவன் பிறக்கவேண்டியிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் மேல் வகுப்புக்குப் போக ஒரு வருஷ காலம் என்று ஏற்பட்டிருக்கிறது. ஜன்மத்தின் படியில் இவ்வளவு காலமென்று ஏற்பட்டு இல்லை. ஆனால் ஒருவன் அடையும் விருத்தியைப் பொருத்திருக்கிறது. மேலும் அடையவேண்டிய நற்குணங்கள் தன்னில் இழைந்து பக்குவத்திற்கு வர வெகு ஜன்மங்கள் செல்லுவதால் ஒவ்வொரு படியிலும் அநேக ஜன்மங்கள் எடுக்கவேண்டியிருக்கிறது. ஆனால் தேறியிருக்கும் ஜீவான்மா அடையவேண்டிய சீலங்களை சீக்கிரமடைந்தால் இரண்டொரு ஜன்மத்தில் ஒருபடியிலிருந்து மேல்படிக்குப் போகக்கூடும்.

இரண்டாவது விதியும், மூன்றாவது விதியும் ஒருவன் செய்த வினையைப் பற்றியும், மற்றும் பற்றைப் பற்றியுமிருப்பதால் அவைகளைப்பற்றி இப்போது இவ்விடம் பேச வில்லை. முதலாவது விதியின்படி பிறந்துவருவது நமது தேர்ச்சியைப்பற்றியிருக்கின்றது. நம்முடைய தேர்ச்சி எவ்வளவு என்பதும் இன்னபடியிலிருப்பது என்பதும் நமக்குத்தெரியாது. இதை மரண

முடைந்த பிறகு ஜன்மத்திற்குத் திரும்பும்போது கர்மத்திற்கு அதிகாரியாயிருக்கும் சதுர் மகா ராஜாக்கள் நிர்ணயிக்கவேண்டிய விஷயம். ஆனால் நாம் கிரகிக்கவேண்டியது யாதெனில், இனிமேல் நம் மூலமாக பிறக்கவேண்டியவர்களின் நிலைமையை கவனிப்பதே தற்காலத்தில் முக்கியமாய் இருக்கின்றது. ஏனெனில், பிறப்பிற்கு இடம் இவ்விடமிருப்பதால் அந்தந்த ஜீவாத்மாவுக்கு தக்க இடம் நாம் செய்துவைக்கிறோமே தவிர மற்றப்படி மேலோர்கள் அல்லது தேவர்கள் செய்வது அல்ல. ஆதலால் நாம் நம்முடைய தேகம் வைத்திருக்கும் திறமையிலும் ஆசாபாசங்களை வேண்டியதை எடுத்து வேண்டாததை விலக்கிவைக்கும் சாமர்த்தியத்திலும், மனதில் பகுத்தறிவு, திடம், தைரியம், சாமர்த்தியம் முதலிய இவைகள் இருக்கும் வகையிலும், நேசத்தோடும் அன்போடும் மற்றவர்களை ஆதரித்துவரும் தன்மையிலும் நாம் எப்படிப்பட்ட நிலையிலிருக்கிறோம் என்று காட்டுகிறோம். திறமையுள்ள அவ்வித ஜீவாத்மாக்களை அழைத்துக் கூப்பிடுவதுபோல் இருக்கின்றது. ஆகையால் நாம் என்னிலையில் வைக்கின்றோமோ அன்னிலைக்குத்தக்க குழந்தைகள் பிறந்துவரும்.

இப்பூமியில் இப்போது ஜனனமெடுத்திருக்கும் ஜீவாத்மாக்களில் பத்தில் ஒன்பது பேர் சாமானியமான ஜனங்களென்றும், மற்ற ஒரு பகுதி புத்திசாலிகளென்றும் எடுத்து வகுத்திருக்கின்றனர். ஆதலால் இன்னும் பிறக்காது இருப்பவர்களும் இதே பிரகாரம் இருப்பார்களென்று நம்பிக்கை. ஆனால் விகாஸமுறை படிப்படியாய் மேனோக்கி ஜனங்களை ஏத்திக்கொண்டு வருவதால் எப்படி நாம் நம் இந்தியாவிலே படித்து பிரக்கியாதியானவர்களை இப்போது அதிகமாய் காண்கிறோமோ அப்படியே அந்த ஒன்பது பங்கிலிருப்பவர்களில் அநேகர் மேல்படிக்கு வந்திருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் ஒரு பகுதியாயுள்ள அறிவுடையோர்கள் நம்முடைய குடும்பங்களில் வந்து பிறக்க இடந் தருவோமா? அல்லது ஒன்பது பகுதியிலிருந்து மேல் வரப்பட்டவர்களுக்கு இடந் தருவோமா? அல்லது சாமானியமாய் இருக்கப்பட்டவர்களுக்கு இடந் தருவோமா? என்பதை கிரகஸ்தராய் இருக்கப்பட்ட ஒவ்வொருவரும் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம். முன்காலத்தில் புத்தபகவான் கீழ் இருந்த மகா சிஷ்யர்கள் இருந்ததுபோல் இப்போது ஏன் இல்லை என்று கேட்ட கேள்



விக்கு படித்த பெரியோர்கள் எல்லோரும் சந்நியாசங்கொண்டு பிறவிக்கு இடங் கொடாததால் அறிவாளிகள் பிறக்கவில்லை என்றும், மற்று இருக்கப்பட்ட கிரகஸ்தர்கள் தாங்கள் இருக்கவேண்டிய நிலையையும் கவனிக்கவேண்டிய ஒழுக்கத்தையும் தவறி கீழான நிலைமையில் நடந்ததால் மேல்படியிலுள்ளவர்கள் வந்து பிறக்க இடங்கொடுக்க வில்லையென்றும் கூறினர். ஆதலால் நாம் பிரம்ம ஞானஸபை மெம்பர்களாயிருப்பவர்களும், தாரக சங்கத்திலிருப்பவர்களும் இந்த நிலைமையை தீரயோசித்து, அதன்படி நடப்பார்களானால் மேல்படியிலுள்ளவர்களுக்கு இடங்கொடுத்து தன் குடும்பத்தையும், வம்சத்தையும், உலகத்தையும் சீர்தூக்கிவரச் செய்ய முடியும். இல்லாவிடில் புனர் ஜன்மம் உண்டென்று சொல்லிக் கொண்டும், நம்பிக்கொண்டும் வருவதால் என்னபயன்? புனர்ஜன்மம் இருப்பதாகத் தெரியாதவர்கள் கோடிக்கணக்காய் உலகெங்கும் பரவியிருக்கின்றனர். அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம் என்ன? “உண்பதும் உறங்குவது” தானா?

தற்காலத்தில் லோககுரு வந்திருப்பதால் அவருடைய வேலையைச்செய்ய இப்போதும் அவர் போன பிறகும் அவர் காட்டினதை சீர்தூக்கி மேலுக்குக்கொண்டுவர அநேகர் தேவையாயிருக்கின்றது. அநேக ஆத்மாக்கள் பிறப்பிற்கு தக்க இடமில்லாமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பிரம்மஞான ஸபை மெம்பர்களின் குடும்பங்களிலும் தாரக சபையார் குடும்பங்களிலும் பிறக்கவேண்டியதாயிருக்கிறது. மேலும் இப்போது சுவர்க்கத்திற்குப் (Devachan) போக இஷ்டப்படாதவர்கள் அநேகர் நம்மிடையிலிருக்கின்றனர். கிழவராயுமிருக்கின்றனர். இவர்கள் இறந்ததும் சாதாரணமாய் போகிறவழியை விட்டு சீக்கிரம் பிறப்பார்கள் இவர்களுக்கு நாம் தான் இடங்கொடுக்கவேண்டும்.

வீட்டைக்கட்டி அதை சீராய்ப்பாராது ஒட்டையும் குப்பையும் சேரவிட்டு விளக்கு ஏத்தாது வைத்திருந்தால் பேய், கோட்டான் முதலியன வந்து அணுகும். அப்படிச்செய்வதை விட்டு சுத்தியாயும் தூபதீபங்களேத்தி வாழ்ந்த வீட்டில் தேவர்களும் இலக்ஷ்மியும் வாசமாவார்கள். அந்தப்படி நம்வீடாகிய தேகங்களை சுத்திசெய்து பகுத்தறிவாகிய விளக்கேத்தி புனர் ஜன்மத்தால் வரும் ஆதாயத்தைக் கொண்டு சீராய் வாழ்ந்தால் நல்லவர்கள் வருவார்கள்.

சான்றோர் என்கை ஈன்றோர்க்கழகு

தி. மாணிக்கம் பிள்ளை,

அடையார்.

# ஸமாச்சாரம்.

சென்ற மேமீ 8உ மாதாஸ்ரீ ஹேலினாம்பாள் அம்மையாரின் தினம் பிரம்மஞான கிளைச்சபைகளுள்ள விடங்களிலெல்லாம் விசேஷ உத்ஸாகத்துடன் கொண்டாடப்பட்டது. சிவகங்கை பிரம்மஞான ஸபைக் காரியதரிசி அவர்களிடமிருந்து வந்த ஸமாச்சாரத்தை இதனடியில் பிரசுரிக்கின்றோம்:—

சிவகங்கையில் வெண்தாமரைநாள் விசேஷ உத்ஸாகத்துடன் நடத்தப்பட்டது. 600 பேர் ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. பிரம்மஞான ஸபை மண்டபம் வெண்தாமரை மலர்களால் நன்றாய் அலங்கரிக்கப்பட்டு, அங்கு பகிரங்க சபை ஒன்று கூடிற்று. வந்திருந்த நண்பர்களுக்கு சிற்றுண்டி அளிக்கப்பட்டது. வழக்கம்போல் 'ஆசியா கண்டச் சோதி'யிலிருந்தும், 'ஸ்ரீமத் பகவத் கீதை'யிலிருந்தும் சில பாகங்கள் படிக்கப்பட்ட பின்னர், ஸபாநாயகர் அவர்களால் அம்மையாரின் திவ்ய சரித்திரத்தைப் பற்றியும், அவரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரம்ம வித்தியா மஹா ஸபையின் மஹிமையைப் பற்றியும் சென்ற 51 வருஷங்களாய் அச்சபை ஸகோதரத்துவத்தை இவ்வுலகின்கண் நிலை நாட்டின சிறப்பைப்பற்றியும் உபந்யாஸம் செய்யப்பட்டு பரமசாந்தி ஸந்தோஷத்துடன் ஸபை கலைந்தது.

... ... ... ... ...

சென்ற மேமீ 11உ உதயதிசை நக்ஷத்திர மஹா சங்கத்தின் தலைவரான ஸ்ரீமான் கிருஷ்ணஜி அவர்களின் ஜன்மதினம் விசேஷ பக்தி சிரத்தையுடன் கிளைச்சபைகளுள்ள விடங்களில் கொண்டாடப்பட்டது. சிலவிடங்களில் மேமீ 25உ அவர் ஜன்ம தினம் என்று கணக்கிட்டு அந்த தினத்திலும் கொண்டாடினார்கள்.

... ... ... ... ...

ஸ்ரீமான் கிருஷ்ணஜி அவர்களின் ஆனந்த ஸாம்ராஜ்யம் என்னும் அரிய நூல் வெளிவந்த சில வாரங்களுக்குள் 7000 பிரதிகள் ஐரோப்பா அமெரிகா முதலிய நாடுகளில் சிலவாயினவென்று அமெரிக்கா நாட்டுப் பத்திரிகை யொன்றிலிருந்து அறிகிறோம். இவ் வுயர் நூலின் மஹிமை இதனால் நன்கு விளங்குகிறது.

... ... ... ... ...

இவ்வருஷம் ஸர்வதேசத் தாரகஸபைத் திருவிழா வருகிற ஆகஸ்ட் மீ 5உ முதல் 13உ வரை ஆம்மேன் என்னுமிடத்தில் நடைபெறும். டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்களும் ஸ்ரீமான் கிருஷ்ணஜி அவர்களும் அங்கு விஜயம் செய்வார்கள். இந்தியாவிலிருந்து ஸ்ரீமான் பட்டவர்த்தனரும் அவர் மனைவி மாலதி அம்மாளும் ஸ்ரீமான் யதுநந்தன் பிரஸாதரும் அங்கு செல்வதற்காக சென்னையை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

... ... ...



நமது அன்னையார், காலிபோர்னியாவிலுள்ள ஓஹாய் என்னுமிடத்தில் ஸ்தாபித்திருக்கும் ஆனந்தாச்ரமத்திற்கு (Happy Valley) நாற்பதினாயிரம் டாலர்கள் நன்கொடை வேண்டுமென்று அறிவித்துக்கொண்ட சில வாரங்களுக்குள் ஐம்பத்தி மூவாயிரம் டாலர்கள் கிடைத்து விட்டனவென்றும், இன்னும் அபரிமிதமாய் நன்கொடைகள் வந்து கொண்டிருக்கின்றன வென்றும், அந்நன்கொடைகளைக் கொண்டு அந்த ஓஹாய் என்னும் இடத்தில் புதிய நாகரீகத்தை ஸ்தாபித்து நடத்துவதற்கு பல ஸ்தாபனங்களை ஏற்படுத்துவார்களென்றும், அங்கு ஓர் பெரிய தாரகாச்ரமம் ஏற்படுத்தி வருஷத்திற் கோர்முறை ஆம்மனில் நடப்பதுபோல் ஸர்வதேசத் தாரகமஹாநாடு நடைபெற ஏற்பாடாகி வருகிறதென்றும் அமெரிக்கா நாட்டுப்பத்திரிகை யொன்றில் கூறி யிருக்கின்றது.

... ... ... ...

மாதரின் இந்தியச் சங்கத்தின் வருஷாந்திர கூட்டம் ஒன்று சென்ற 17–4–27–ல் அடையார் பிரும்மஞான சங்கத்தில் கூடிற்று. கனம் டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் அக்ராசனம் வகித்தார். அநேக ஸ்திரீகளும் கனவான்களும் வந்திருந்தனர்.

திவான்பகதூர் கே. எஸ். சந்திரசேகர அய்யர் மனைவியார் ஸ்ரீமதி பார்வதி அம்மாள் அவருடைய பரோபகார சேவையைப் பாராட்டி கவர்ன்மெண்டார் கெய்ஸர் இஹிண்ட் தங்க பதக்கம் அளித்திருப்பதைக் குறித்து ஆசிகூறி அவரை மைசூர் கவர்ன்மெண்டார் பெங்களூர் ஜில்லாபோர்ட் அங்கத்தினராக நியமித்ததையும் பாராட்டி அக்கிராசனர் புகழ்ந்து பேசினார்.

டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் பிறகு ஸ்திரீகள் சங்கம் செய்துள்ள வேலையைப்பற்றிப் பின்வருமாறு பேசினார்.

இச்சங்கம் 10 வருஷங்களுக்கு முன்னால் மிஸஸ் ஜினராஜதாஸாவின் முயர்ச்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது முதல் இது வெகு அரியவேலைகள் செய்துவந்திருக்கிறது. ஸ்திரீகளின் நன்மைக்காக இச்சங்கம் பாடுபட்டு வருகிறது. இதற்குக் கிளைஸ்தாபனங்கள் இந்தியா முழுவதுமிருக்கின்றன. இச் சங்கத்தில் வகுப்பு வித்யாசம் பாராது எல்லா ஜாதி மதத்தினரும் சேர்ந்து வேலை செய்து வருகின்றனர். ஒரு சங்க மூலமாக ஸ்திரீகளின் குறையை எடுத்துக் கூறினால் அவற்றிற்கு சீக்கிரம் விமோசனம் ஏற்படும். டாக்டர் பெஸண்டு மிஸஸ் கஸின்ஸ் மிஸஸ் ஜினராஜ தாஸா ஆகிய இவர்கள் இச்சங்கத்தின் பெருமைக்காக ...டு பட்டு வந்திருக்கின்றனர். தற்சமயம் இச்சங்கத்திற் ... இருக்கிறது. மேல்நாட்டு ஸ்திரீகளுடன் சேர்ந்து ...ந்தி ஸ்திரீகள் தற்சமயம் விசேஷ மதிப் ...ற ஸ்தாபித்துக் கொண்டி...

இந்திய ஸ்திரீகள் தங்கள் தேச முன்னேற்றத்தை மனதிற்கொண்டு அற்ப வித்யாசங்களைப் பாராட்டாது உழைக்கவேண்டும்.

மிஸஸ் கஸின்ஸ் பிறகு வருஷாந்திர யாதாஸ்தைப் படித்தார். சென்ற வருஷத்தில் 400 புதிய அங்கத்தினர்கள் சங்கத்தில் சேர்ந்திருப்பதாகவும், கிளைச்சங்கங்கள் நல்ல வேலை செய்துவருகின்றனவென்றும், சிசு சம்ரட்சணை வேலையில் அவை உற்சாகமாக உதவிபுரிந்திருப்பதாகவும், சம்மத வயதை 16 ஆக உயர்த்த இச்சங்கம் நல்ல கிளர்ச்சி செய்திருப்பதாகவும், சட்டசபைத் தேர்தலில் ஸ்திரீகள் விசேஷ உற்சாகமும் சிரத்தையும் காட்டியிருப்பதாகவும், இச்சங்கத்தினரில் ஒருவராகிய டாக்டர் முத்துலக்ஷ்மி சட்டசபை யங்கத்தினராக நியமிக்கப்பட்டு உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அச்சங்கத்திற்கே கௌரவமென்றும் அந்த யாதாஸ்தில் கூறப்பட்டிருக்கிறது.

"ஸ்திரீகள் கல்வியைப் பரவச்செய்து பால்ய விவாகத்தையும் தடுத்தாலல்லது இந்தியா முன்னேற்றமடையாது" என்று அதில் முடிவுரையாக எழுதப்பட்டிருந்தது. இந்த யாதாஸ்து அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் சங்கத்தின் உபதலைவிகளில் ஒருவராகவும், மிஸஸ் வேங்கடசுப்பராவ் கஜான்ஜியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்வரும் தீர்மானங்கள் அப்பால் ஏகமனதாக நிறைவேறின.

"ஸ்திரீகள் ஜூரர்களாக விருக்கும்படி. கவர்ன்மெண்டார் சட்டத்தைத் திருத்தவேண்டும்."

"பால்ய விவாகம் கொடுமையாக விருக்கிறபடியால் 16 வயதுக்கு முன் விவாகம் செய்துகொள்வது குற்றமென்று கவர்ன்மெண்டார் சட்டமியற்றவேண்டும். சம்மத வயதை 16 ஆக உயர்த்தவேண்டுமென்று இச் சங்கமபிப்பிராயப் படுகிறபடியால் ஸ்ரீ. ஹரிஸிங் கவுரின் சம்மதவயது மசோதாவை நாம் ஆதரிக்கிறோம். கவர்ன்மெண்டார் இதற்குப் பூரண ஆதரவளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்."

"ஹிந்து விதவைகளுக்கும், இதர ஹிந்துப் பெண்களுக்கும் தங்கள் கணவன் தகப்பனார் சொத்திற்கு பாத்யம் ஏற்படக்கூடிய வழியில் ஹிந்துமதச் சட்டத்தை திருத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டை இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது."

அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஸ்திரீ கல்வித்திட்டத்தை இச்சங்கம் ஆதரிக்[illegible] ஸ்திரீகள் மகாநாடு டில்லியில் கூட[illegible] டுமெ[illegible] [illegible]க்கிறது." இத்துடன் கூட்[illegible]

தமிழ்நாடு [illegible] 2/08/16 [illegible] 03